Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-15 28-04-2005 வியாழக்கிழமை ஓசை 69



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11478)

## பொல்காவெலப்பகுதி புகையிரதக் கடவையில் கோர விபத்து

# அறிவுறுத்தலை புறம்தள்ளிய பேருந்து மீது புகையிரதம் மோதியது!

### 35 பேர் பலி; 30 பேரின் நிலை கவலைக்கிடம்

குருநாகல் மாவட்டத்தில் பொல்காவெல யாங்கல்மோதரப் பகுதியில் புகையிரதத்துடன் பயணிகள் பேருந்து ஒன்று மோதியதில் பேருந்தில் பயணம் செய்த 35 பேர் உயிரிழந்துள்ளனர். 53 பேர் படுகாயமடைந்தனர்.

கொழும்பிலிருந்து 80 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பொல்காவெலப் பகுதியிலிலேயே இக்கோர விபத்து நேற்றுக் காலை 8.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச்சென்று கொண்டிருந்த புகையிரதமும் குருநாகல் ஹல்கிரியகமவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்துமே விபத்துக்குள்ளானது. கண்டியிலுள்ள சமய ஸ்தலத்திற்கு பக்தர்களை ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டு தம்புள்ள வழியாக கொழும்பு திரும்பிக்கொண்டிருந்த இந்தப் பேருந்து, பொல்காவெல புகையிரதக் கடவையில் புகையிரதம் வருவதற்கான முன்னாயத்த மணி ஒலித்து தடை போடப்படும் கணத்தில் கடவையைக்கடக்க முயன்றதாலேயே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று விபத்துக் குறித்து கருத்துத் தெரிவித்த சிறிலங்காப் பொலிஸ் அதிகாரி கூறினார். இரண்டு பேருந்து சாரதிகள் யார் தமது பேருந்தை முதலில் கொழும்புக்கு கொண்டு செல்வது என்ற போட்டியில் பேருந்தை வேகமாக ஓட்டி வந்துள்ளனர். இதுவே இந்த அனர்த்தத்திற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். பேருந்தில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலனவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், காயமடைந்தவர்களில் 30 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர்கள் குருநாகல் வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)



# பொதுக்கட்டமைப்புக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது

# தெரியாதவொன்றைப்பற்றி கருத்துக் கூற முடியாது



## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

**சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. தெரியாத ஒன்றைப் பற்றி நான் கருத்துக்கூற முடியாது என்றும் சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பொதுக்கட்டமைப்புக் குறித்து சிங்கள ஊடகம் ஒன்று பிரதமரிடம் வினவிய போதே பிரதமர் இவ்வாறு பதிலளித்துள்ளார். பொதுக்கட்டமைப்புக் குறித்து அமைச்சரவை மட்டத்திலோ அல்லது பொறுப்பு வாய்ந்த மட்டத்திலோ எதுவித பேச்சுவார்த்தைகளும் இதுவரை நடைபெறவில்லை எனத் தெரிவித்த பிரதமர், நிலைமை இவ்வாறு இருக்கையில் தான் அது குறித்துக் கருத்துத் தெரிவிப்பது உசிதமல்ல எனவும் குறிப்பிட்டார்.இதேவேளை பொதுக்கட்டமைப்புக் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபாலசிறிசேனவிடம் கேட்ட போது, அது சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட ஒருயோசனை என மாத்திரம் பதிலளித்துள்ளார்.

## சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுத்துறை உறுப்பினர் செங்கலடியில் சுட்டுக்கொலை!


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று மாலை சிறிலங்காப் பொலிஸ் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அருளதுயலாகே செல்டன் நவரட்ண (வயது-33) என அடையாளம் காணப்பட்டுள்ள இவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தவராவார். செங்கலடி கடைத்தெருவிற்கு வழமைபோல் மாலை வேளை சென்ற சமயம் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தன்னை இலக்கு வைத்தவர்கள் மீது இவர் தனது துப்பாக்கி மூலம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதிலும் அது பலனளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

## வெற்றிச்சமர்களின் நினைவு நிகழ்வில் நேற்று குறிபார்த்துச் சுடும் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

ஆனையிறவு படைத்தள அழிப்பு மற்றும் தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்பு சமர் ஆகியவற்றின் வெற்றிவிழாவினை முன்னிட்டு போராளிகளிடையே குறிபார்த்துச் சுடும் போட்டி நேற்று இடம்பெற்றது.



இவ் வெற்றி விழாவை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் சமரணிகளுக்கிடையேயான விளையாட்டு நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில், நேற்றுக்காலை ஆறு மணியளவில் குறிபார்த்துச் சுடும் போட்டியின் இறுதிச் சுற்றுக்கள் விடுதலைப்புலிகளின் போர்ப்பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றன. வடபோர் முனைக்கட்டளைத்தளபதி கேணல் தீபன் இப்போட்டிகளை ஆரம்பித்துவைக்க, ஆண்போராளிகள், பெண்போராளிகள் எனப் இருபாலாரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இதேவேளை இவ்விழாவின் இறுதி நாளாகிய இன்று அதிகாலையில் போராளிகளின் மரதனோட்டமும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## புலிகளை வீணாகச் சீண்டும் செயற்பாடுகளில் படைத்தரப்பு ஈடுபடுவது கண்டனத்திற்குரியது!

### - மட்டு. அம்பாறை அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருக்கும் இவ்வேளையில் விடுதலைப்புலிகளை கோபமூட்டும் செயல்களில் சிறிலங்கா படைத்தரப்பு ஈடுபட்டுவருவதை விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறையினர் வன்மையாகத் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதலைப்புலிகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் அரசியல் செயற்பாடுகள், நிருவாகக் கட்டமைப்புக்கள் போன்றவற்றை பொறுக்க முடியாத அரச படைகளும், அதனுடன் கூடிச் செயற்படும் சில துரோகக் கும்பல்களும் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிகளில் இடையூறு விளைவித்து வருவதோடு, விடுதலைப்புலிப் போராளிகள் மீது அடாவடித்தனங்களையும் மேற்கொண்டுவருகிறார்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மணல் திட்டில் இறக்கிவிடப்பட்ட 21 ஈழத்தமிழர்கள் மீட்பு!

(மன்னார்)

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து தமிழகத்தில் வசித்து வந்த 21 ஈழத்தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்கள் தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வேடன்காலணி, பூலோகப்பிட்டி மற்றும் கடலூர் மாவட்டத்தின் காட்டுமன்னார், வேலூர் மாவட்டத்தின் மின்னனி, தூத்துக்குடி மாவட்டத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மேதின ஊர்வலம் கரடிப்போக்கு சந்தியிலிருந்து ஆரம்பம்

கிளிநொச்சியில் மேதினப் பேரணி அன்றையதினம் மாலை மூன்று மணிக்கு கரடிப் போக்குச்சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. பேரணியில் உந்துருளிப்பவனி, மிதிவண்டிகள், முச்சக்கர வண்டிப்பவனி, பிரதேச ரீதியான ஊர்திகள் பவனி என்பவற்றுடன் அரச ஊழியர்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவாளர்கள் உட்பட பெருமளவானோர் பாங்கேற்கவுள்ளனர். பேரணி கிளிநொச்சி மத்திய விளையாட்டு திடலை சென்றடைந்ததும் மேதினக்கூட்டம் இடம் பெறும்.இங்கு விடுதலைப் புலிகளின் மகளிர் கலை பண்பாட்டுக்குழுவினரின் இசைக்குழு, விடுதலைப்புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

அமுதசுரபி குளிர்பருகை 497 யாழ்சாலை,கிளிநொச்சி. மேற்படி ஸ்தாபனத்தில் மின்பிறப்பாக்கி 3பேஸ், மின்இயக்க வெதுப்பகம் (கமிசன்அடிப்படையில்),தளபாட பொருட்கள் என்பன விற்பனைக் குண்டு (6084)

### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்) ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக் கப்படும். தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளி நொச்சி. (6072)

### தவறிவிட்டது

ஆண்டி சுப்பையா, அம்மன்வீதி பாரதிபுரம் கிழக்கு ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. 451632337, கிராமிய வங்கிவைப்பு புத்தகம் இல.14631 ஆகியன டிப்போசந்திக்கும்,கனகபுரம் நாகதம் பிரான் ஒழுங்கைக்குமிடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழ நாதம் பணிமனையில் ஒப்படைக் கவும் தகவல்:- ஆசுப்பையா. (6083)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு

அன்புவாணிபத்தில் சீமெந்துக் கல் விற்பனைக்குண்டு.அளவு-"6x4" x12" கிடைக்குமிடம் அன்பு வாணிபம், அந்தோனியார் கோவிலடி,அளம்பில் விலை ஒருகல் 20/=. (5919)

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசாயனவியல் வகுப்பு- புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

## விண்ணப்பம் கோரல்

காப்புறுதித் துறையில் முன்னோடியாகத் திகழும் காப்புறுதி நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதனால் பின்வரும் இடங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. கிளிநொச்சி, முல்லைத் தீவு,புதுக்குடியிருப்பு,விசுவமடு,துணுக்காய்,மல்லாவி, மாங்குளம், வயது-18வயதுக்கு மேல் இருபாலரும்.

**தகைமை~O/L சித்தி**
**வி.முடிவுத்திகதி~ 04.05.2005.**

திருசக்தி பல்பொருள் வாணிபம்,
தபாற்கந்தோர் அருகாமை, கிளிநொச்சி.

என்ற முகவரிக்கு காப்புறுதி கம்பனிக்கு என இடது பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும். (6082)

## காணவில்லை

**நாதன் விஜயகுமாரி வயது 24 நிறம் கறுப்பு-சராசரிக்கு சற்று உயரம் குறைவானவர் ஊருக்கு செல்கின்றேன் என்று சொல்லிவிட்டுச் சென்றவர் கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக வீடு திரும்பவில்லை. இவர் எங்கிருந்தாலும் திரும்பி வீட்டுக்கு வரும்படி கணவர் ஆ.கருணாநிதி மற்றும் உறவினர்கள் தேடுகிறார்கள். இவர் கணவர் பணிபுரியும் முஸ்லிம் கோட்டல், 276.K.K.S வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.** [சி.11820]

# மீளக்குடியமர்வுக் கொடுப்பனவிற்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களிற்கான ஒருங் கிணைக்கப்பெற்ற ஜீவனோபாயக் கொடுப்பனவாகிய 25,000 ரூபாவினைக் பெறத்தவறிய தகுதியுடைய குடும்பங் களை எதிர்வரும் 10.05.2005 ஆம் திகதிக்கு முன்பதாக மேற்படி கொடுப் பனவிற்கு விண்ணப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராச நாயகம் வேண்டியுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக் கையில்; கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களில் ஒருங்கி ணைக்கப்பெற்ற ஜீவனோபாயக் கொடுப்பனவாகிய ரூபா 25,000 பெறத் தகுதியான குடும்பங்களில் இதுவரை விண்ணப்பித்த அனைத்துக் குடும் பங்களுக்கும் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே இதுவரை ஒருங்கிணைக்கப் பெற்ற ஜீவனோபாயக் கொடுப்பன வினை பெற்றுக்கொள்ளாத தகுதி யுடைய குடும்பங்களை அந்தந்தப் பகுதிபிரதேச செயல்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வண்ணம் வேண்டியுள்ள துடன், 31.03.2005 வரை கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த அனைத்துக் குடும்பங்களும் 10.05.2005 ஆம் திகதிக்கு முன்பதாகத் தங்களது விண்ணப்பங்களை பிரதேச செயல்கள் ஊடாக சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் குறித்த கொடுப் பனவினைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலை ஏற்படுமெனவும் தெரிவித் துள்ளார். (சோ)

### அரச ஊழியர்கடன் திட்டத்திற்கான சுற்று நிருபம் கிடைத்தது

அரசாங்க நிர்வாக உள் நாட்டலுவலக அமைச்சின் கீழ் அறி முகப்படுத்தப்பட்ட அரச ஊழியருக் கான பத்து இலட்சம் ரூபா கடன் திட்ட சுற்று நிருபம் துணுக்காய்ப் பிரதேச செயலகத்திற்கு கடந்த திங்கட் கிழமை வந்து சேர்ந்துள்ளன.

இக்கடன் திட்டத்தில் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களும் இக் கடன் திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். (24)

### பொன்னம்பலம் மருத்துவமனையில் கண் சத்திரசிக்ச்சை

கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிவந்தா அவர் களால் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன் னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் வைத்து நாளை வெள்ளிக் கிழமை கண்நோயாளர்கள் பார்வை யிடப்படவுள்ளனர்.

அன்றைய தினம் தெரிவு செய் யப்படும் நோயாளர்களுக்கு 30ஆம் திகதியன்று கண்சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்படவுள்ளதெனவும் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ள விரும்பு வோர் மற்றும் கண்நோய்களுக்கு சிகிச்சைபெறவிரும்புவோர்,நாளை வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையுடன் தொடர்புகொள்ளும் வண்ணம் மருத்துவப்பிரிவு நடுவப் பணியகப்பொறுப்பாளர் வேண்டியு ள்ளார். (சோ)

## கண்டெடுப்பு

புதுமுறிப்பு மகாதேவாஆச்சிரம சைவச்சிறுவர் இல்ல மாணவனால் புதுமுறிப்பு வீதியிலிருந்து தங்க மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு மகாதேவ ஆச்சிரமம் தவத்திரு கணே சானந்த சுவாமிகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் ஜெயந்திநகரில் அமைந்துள்ள ஆச்சிர மத்திற்கு சமுகம் கொடுத்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (சோ)

## நன்றி நவிலல்

*சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு அளம்பில் றோ.க.வித்தியாலய மாணவர் களின் ஆற்றுப்படுத்தல். கல்விச் சுற்றுலா 16.04.2005-23.04.2005 வரை இடம்பெற்றது. இச்சுற்றுலாவிற்கு ZOA நிறுவனத்தினர் தமது பூரண பங்களிப்பை நல்கி பேருதவி வழங்கியுள்ளனர். இந்நிறுவனத்தினையும் அதன் ஊழியர்களான திரு.க. கிறிஸ்தோபர்,செல்வி ந.மேனகா ஆகியோருக்கும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சார்பாக எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிநிற்கின்றோம்.*

தகவல்:-
அதிபர்,
மு/அளம்பில் றோ/க,
வித்தியாலயம்.

(6085)

## சாவு அறிவித்தல்

### சபாரத்தினம் கனகரத்தினம்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,பெருந்தெருக்கள் திணைக்களம்)**

*நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும்,சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் கனகரத்தினம் அவர்கள் 2005.04.27 புதன்கிழமை காலமாகிவிட்டார்.*

*அன்னார் சபாரத்தினம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அமிர்தவள்ளியின்(சோதி) அன்புக் கணவரும், காலம்சென்ற விநாசித்தம்பி இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம்சென்ற நவரத்தினம் ஞானம்பிக்கை மற்றும் பேராசிரியர் மனோ சபாரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும்,சுசீலா (TTN லண்டன்), சுபத்திரா (ஆயுர்வேதவைத்தியர்), முருகதாஸ் (பொதுமுகாமையாளர்,நமதுஈழநாடு), கண்ணதாஸ் (ஆங்கில மொழித்துறை யாழ்.பல்கலைக்கழகம்), சுகன்யா(டென்மார்க்), ரமணதாஸ் (சுவிஸ்), விநாயகதாஸ் (கணக்காளர்-சிலிங்கோ) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இரவி (IBC லண்டன்),புவனேஸ்வரி, (தேவிஆசிரியை-யாழ்.கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), திருமகள்,சிவசுந்தரம் (டென்மார்க்), இன்பராணி,யசோதரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ,சஞ்சயன், சஞ்சுதன், மாதங்கி,அபிநயா, வார்ஷ்நேயன், சுஜீவன், கஜன்,ராமசுதன், அபிராமி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் சரசாலை தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் 2005.04.28 ஆம் திகதி வியாழக்கிழமை (இன்று) பகல் 11.00 மணியளவில் நடைபெற்றுப் ,பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**மெய்கண்டான் வீதி,**
**சரசாலை தெற்கு,**
**சாவகச்சேரி.** (சி.11800)

**தகவல்:-**
**மனைவி, பிள்ளைகள்.**



## 04 ஆம் ஆண்டு நினைவில்

### லெப். கேணல் நிர்மா

**ஞானானந்தம் மேரிசாந்தினி**
சொந்தஇடம்:- கனகபுரம்,கிளிநொச்சி.

தாய் நிலம் மீட்கத் -தலைவன்
வழி நடந்த-சோதரியே
தலைவன் ஆணைதனை-என்றும்
உன் நினைவுடனே
நிறைவேற்றுகின்றோம்.

**தாயின்மடியில் :- 23.09.1973** **தாயகமண்ணில் :- 28.04.2001**

சம்பவம்:- தீச்சுவாலை சமரின்எறிகணை வீச்சில்
சம்பவம் நடந்த இடம்:-பளைப்பகுதி

என்றும் உன் நினைவில்
லெப்.கேணல் பொன்னம்மான்
கண்ணிவெடிப்பிரிவினர்.

(5840)



தாய்லாந்தின் பட்டாணி மாநிலத்தில் தேவாலயம் ஒன்றில் 2004ஆம் ஆண்டு இதேதினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதனை நினைவுகூரும் முகமாக இன்றும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற எதிர்பார்ப்புடன் காவல் பணியில் ஈடுபட்டுள்ள தாய்லாந்து இராணுவவீரர்.


## ஜப்பானுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 42 பேரை சீன அரசு கைது செய்தது

ஜப்பானுக்கு எதிரான போராட்டத்தின்போது கல் வீசி கடைகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாக 42 பேரை சீன அரசு கைது செய்துள்ளது.

கடந்த காலத்தில் சீனாவை ஜப்பானிய அரசு ஆக்கிரமித்தது. அப்போது சீனர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் ஜப்பானிய வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. நடந்த சம்பவத்திற்கு இந்தப் புத்தகத்தில் வருத்தம் தெரிவிக்கப்படவில்லை.

இதனால், சீனாவில் ஜப்பானுக்கு எதிராகப் போராட்டம் வலுப்பெற்று. இரண்டு வாரங்கள் போராட்டம் நடந்தது. இதனால், ஜப்பான் உற வில் விரிசல் ஏற்பட்டது.

இந்த நிலையில், இந்தோனேஷியாவில் நடந்த ஆசிய-ஆபிரிக்க மாநாட்டில் பேசிய ஜப்பான் பிரதமர் கொய்சுமி, கடந்த கால சம்பவங்களுக்கு மன்னிப்புக் கேட்டார். இதைத் தொடர்ந்து ஜப்பானின் கோபத்தைத் தணிக்கும் நடவடிக்கையாக போராட்டத்தின்போது வன்முறையில் ஈடுபட்ட 42 பேரை சீனா கைது செய்துள்ளது.



ஈராக்கில் இடைக்கால அரசு கலைக்கப்பட்டதையடுத்து அங்கு வன்முறைகள் அதிகரித்த வண்ணமுள்ள நிலையில் பாக்தாத் தில் பொதுமகன் ஒருவரைச் சோதனையிடும் ஈராக்கியப் படையினர்.

## போப் பதவிக்கு பிரசாரமா? பெனடிக்ற் விளக்கம்

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான போப்பாண்டவரை உலகம் முழுவதுமுள்ள கர்தினால்கள் வத்திக்கான் நகரில் கூடி தேர்ந்தெடுத்தனர். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பெனடிக்ற் போப்பாண்டவராகப் பதவி ஏற்றார் முன்னதாக போப்பாண்டவர் தேர்தலில் அவர் தனக்கு ஆதரவு அளிக்குமாறு கர்தினால்களி டையே பிரசாரம் செய்து ஆதரவுதிரட்டிய தாகத் தகவல் வெளியானது.



இந்தத் தகவலைப் போப்பாண்டவர் பெனடிக்ற் மறுத்துள்ளார். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஐயாயிரம் கிறிஸ்தவர்கள் பெனடிக்டைச் சந்தித்தனர். அவர்களிடையே பேசும்போது தான் போப்பாண்டவர் பதவியை யாரிடமும் கெஞ்சியோ, பிரசாரம் செய்தோ பெறவில்லை என்றார். எனது பணிகளை ஒழுங்காகச் செய்து வந்திருக்கிறேன் மீதமுள்ள நாட்களையும் அமைதியாக கழிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

என்மீது ஏதாவது குற்றம் சாட்டப்பட்டால் அதற்காக இறைவனிடம் வேண்டிக்கொள்வேன் என்றும் போப் பெனடிக்ற் உருக்கத்துடன் கூறினார்.

## மலேசியாவில் அரச பாடசாலைகளில் விரைவில் தமிழ்மொழி விருப்பப்பாடம்

(கோலாலம்பூர்)

**மலேசியாவில் அரச பாடசாலைகளில் விரைவில் சிறுபான்மையினத்தவரின் மொழிகளான தமிழ், மண்டாரின் விருப்பப்பாடமாக இடம்பெறவுள்ளது. தமிழர்களும், சீனர்களும் அரச பாடசாலைகளில் தங்களது தாய் மொழியைக் கற்க வகை செய்யவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

பிரதமர் அப்துல்லா அகமது பத்வாய் இந்தத் தகவலைத் திங்கட் கிழமை தெரிவித்தார்.

ஏனைய சமுதாயத்தினரின் மொழிகளையும் நாம் கற்க வேண்டும். இதுதான் இப்போதைய தேவை என்றும் அவர் தெரிவித்தார்

மலேசியாவில் அரசு நடத்தும் பாடசாலைகள் இருக்கின்றன. சீனர்களும் தங்களது சமுதாயத்தவருக்காக 1200 பாடசாலைகளை நடத்துகின்றனர்.

சீனர்களே இதற்கு நிதி உதவியும் அளிக்கின்றனர். மண்டாரின் மொழியில் இங்கு கல்வி கற்றுக் கொடுக்கப்படுகின்றது. தமிழர்களும் 500 பாடசாலைகளை நடத்துகின்றனர். தமிழிலேயே இங்கு கல்வி கற்றுத் தரப்படுகின்றது. ஆனால் இப் பாடசாலைகளுக்கு கிடைக்கும் நிதி போதாது. ஆகவே இப் பாடசாலைகளில் போதிய வசதி இல்லை. தமிழர்களும் சீனர்களும் பெரும்பாலும், தங்களது சமுதாயம் நடத்தும் பாடசாலைகளுக்கே தங்களது குழந்தைகளை அனுப்புகின்றனர். தேசிய பாடசாலைகளில் குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 15 குழந்தைகள் சேரும் பட்சத்தில் அக் குழந்தைகளின் தாய் மொழியிலேயே பாடம் சொல்லித் கொடுக்கின்றார்கள்.

மலேசியாவில் பல்வேறு இனத்தவர் அமைதியுடனும், நட்புறவுடனும் ஒற்றுமையாக இருந்து வருகின்றனர்.

### புதிய போப்பிற்கு மெழுகுச் சிலை வடிப்பு

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் நகர் மியூசியத்தில் புதிய போப்பாண்டவர் பெனடிக்டின் மெழுகுச் சிலை வைக்கப்பட்டுள்ளது. கியூபா நாட்டுப் பெண் ஓவியர் எய்டா பெரஸ் இந்தச் சிலையை உருவாக்கியுள்ளார். போப்பாண்டவருக்கு மெழுகுச் சிலை அமைக்கப்படுவதும் இதுவே முதல் முறையாகும்.

### லேசான நிலநடுக்கம்

இந்தோனேஷியாவிலுள்ள சுமாத்திராத்தீவில் செவ்வாய்க் கிழமை அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.1 எனப் பதிவாகியிருந்ததாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



பிரிட்டனில் தேசிய பொலிஸ் நினைவகத்தில் பிரிட்டன் ராணி எலிசபெத் உரையாற்றினார். அருகில் பிரிட்டன் பிரதமர் டொனி பிளேயர்.

## செல்போனில் பேசுவதால் எந்தப் பாதிப்பும் இல்லை

செல்போனில் தொடர்ந்து அதிக நேரம் பேசினால் இதில் இருந்து வெளியாகும் ரேடியோ அலைகள் உடல் செல்களைத் தாக்கி அழிப்பதாகவும், டி.என்.ஏ மூலம் கூறுகளைச் சிதைப்பதாகவும் கூறப்பட்டது. மேலும் செல்போன் அலைக் கதிர் வீச்சுக் காரணமாக மூளையில் கட்டிகள் உருவாகும் என்றும் மருத்துவர்கள் எச்சரித்தனர். பெரிய சர்ச்சையை ஏற்படுத்திய இந்த அறிவிப்புக்கள் குறித்து ஜப்பானிலுள்ள நான்கு செல்போன் நிறுவனங்கள் புதிய ஆய்வை நடத்தின. வழக்கமான செல்போன்களில் உள்ளதை விட பத்து மடங்கு கூடுதல் கதிர்வீச்சு பாய்ச்சி இரண்டு ஆண்டுகள் சோதனை நடந்தது. இதில் உடல் தசைகளில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே செல்போன்களில் பேசுவதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது, நோயும் வராது என்று ஜப்பான் நிறுவனங்கள் கூறியுள்ளன. உலக சுகாதார நிறுவனத்திற்கும் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு மருத்துவரின் திறமைக்குறைவால் அவுஸ்திரேலியாவில் 20 நோயாளிகள் இறப்பு

அவுஸ்திரேலியாவில் பணிபுரிந்த இந்திய மருத்துவர் ஜெயந்த் பட்டேலின் திறமைக்குறைவாலும், கவனக்குறைவாலும் 20 நோயாளிகள் இறந்துள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து விசாரிக்க வழக்கறிஞர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக குயின்லாந்து பிரதமர் பீட்டர் பீட்டி அறிவித்துள்ளார்.

ஜெயந்த் மருத்துவராக நியமிக்கபட்டது, தொடர்ந்து அவர் மருத்துவராகப்பணியாற்ற அனுமதிக்கப்பட்டது, திறமைக்குறைவான மருத்துவர்கள் இனிமேல் நியமிக்ளகப்படாமல் தடுப்பது ஆகியவை குறித்து இக்குழு ஆராயும்.

அமெரிக்காவில் பணிபுரிந்த ஜெயந்த் கவனக் குறைவாக இருந்தது அந்நாட்டு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த உண்மையை மறைத்து அவுஸ்திரேலியாவில் அவர் குடியேறியதாகக் கூறப்படுகின்றது.

55 வயதான ஒருவருக்கு அறுவைச் சிகிச்சைசெய்த ஜெயந்த், அவரது வயிற்றில் ஊசி மருந்துக் குப்பியை வைத்துத் தைத்துவிட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அறுவைச் சிகிச்சையின் போது ஒரு பெண்ணின் கர்ப்பப்பையைக் கிழித்துவிட்டதாகவும் மற்றொரு இளைஞர் அவரிடம் அறுவைச் சிகிச்சை செய்தபின் ஆண்மை இழந்ததாகவும் கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் பணியாற்றும் வெளிநாட்டு மருத்துவர்களின் தகுதி குறித்து ஆராயவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.



சிட்னியிலுள்ள மிருகக்காட்சிச்சாலையொன்றில் வெய்யில் காயும் உலகில் தற்போது அழிந்து வரும் மனிதக் குரங்குகள்.

### கொங்கோவில் 3000 இளைஞர்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர்

(கின்ஷாஸா)

மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோவில் சுமார் 2950 இளைஞர்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களை இத்தூரி மாகாணத்தில்வைத்து அரசிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை யுனிசெப் அமைப்பு திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது. ஆயுதங்களை ஒப்படைத்த இளைஞர்களில் 600 பெண்களும் அடங்குவர் என இந்த அமைப்பின் குழந்தைகள் துறை அதிகாரி டிரிஷ் ஹிடில் ஸ்டன் தெரிவித்தார்.

சிறுவர்கள் தங்களுடைய வீடுகளுக்கும், பாடசாலைகளுக்கும் செல்ல உதவும் வகையில் அவர்களை தங்களது பிடியிலிருந்து விடு விக்க வேண்டும் என்று அனைத்து தீவிரவாத குழுக்களுக்கும் ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.

# தேசத்தின் விடுதலைக்கு அனைவரும் ஒன்றுபட மன்னார், கிளிநொச்சி தொழிற்சங்கங்கள் அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

**தேசத்தின் விடுதலைக்கு அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் மேதின நிகழ்வை அனுஷ்டிப்பது என மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களும் தீர்மானம் எடுத்துள்ளன.**

மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இது தொடர்பான கூட்டம் நடைபெற்றது

இதன்போது யுத்தத்தை அடுத்த சமூகத்துக்கு விட்டுச்செல்லக்கூடாது.

மற்றும் சிறிலங்கா அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக மக்கள் சக்தியை அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்துவது என்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

தொழிற்சங்க இணையத்தின் தலைவர் சிந்தாத்துரையின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் முடியரசன் உட்பட பல்வேறு தொழிற் சங்கங்களின் பிரதி நிதிகள் 300 பேரளவில் பங்கேற்ற னர்.

கிளிநொச்சி பிரதேச தொழிற் சங்கங்களின் ஒன்றியத்தினர் விடுத்த மே தினச் செய்தியில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் தமிழ் தேசிய ஒருமைப்பாட்டையும் தமிழரின் சுதந்திரதாகத்தையும் ஒன்று பட்ட சக்தியாக வெளிப்ப டுத்தும் நாளாக இம் மே நாள் அமையட்டும்

இன்று தமிழ் மக்களுடைய உரிமைகளை நசுக்குவதற்கு தென்னிலங்கை வகுப்பு வாதச் சக்திகளும் அரசும் கங்கணம் கட்டி நிற்கின்றது. இவ் விடயத்தில் சிஹல உறுமய, ஜே.வி.பி போன்ற சக்திகள் பலமாக குரல் எழுப்புகின்றன. இருப்பினும் தமிழீழத் தேசியத் தலை வர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் இச் சலசலப்பிற்கு அஞ்சாது தமிழ் மக்களுடைய உரிமையை வென்றெடுப்பதற்காக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். அவரது வழிகாட்டலில் எமது தேசியம், பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு ஒன்று பட்ட சக்தியாக நாம்இன்று விளங்குகின்றோம். இது கடந்த பொதுத் தேர்தல் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் சுனாமிக் கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக பொதுக்கட்டமைப்பைக் கூட இன்றைய சிறிலங்கா அரசு உருவாக்க முடியாத அவல நிலையில் உள்ளது. இந் நிலையில் எவ்வாறு தமிழ் மக்களுடைய உரிமையை அரசு வழங்கப் போகின்றது? மேலும் இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை எவ்வாறு வழங்கப் போகின்றது? எனவே தான் தமிழ் மக்களாகிய நாம் ஒன்றுபட்டு எம் உரிமைகளை வெல்லக் குரல் கொடுப்போம், உரிமைக்காக அணி திரள்வோம்.

சமாதான காலத்திலும், எமது மக்களுக்கான அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை. எமக்கான உரிமையினை வென்றெடுப்பதற்கு தேசியத் தலைவரின் கரங்களைத்தமிழ் மக்களாகிய நாம் ஒன்று பட்டு பலப்படுத்துவோமாயிருந்தால் எமது உரிமையை வெகு விரைவில் பெற்றுக் கொள்ள முடியும் உரிமைகளை வெல்லக் குரல் கொடுப்போம். எமது எழுச்சியை வெளிப்படுத்துவோம். மாறி மாறி ஆட்சி பீடம் ஏறும் அரசாங்கம் அரசைக் கைப்பற்றும் வரை ஒன்றும், கைப்பற்றிய பின் ஒன்றுமாக பேசித் தமிழ் மக்களின் வாழ்வை சீரழித்த வண்ணமுள்ளன. இனி மேலும் இரு பெரும் பேரினவாதக் கட்சியினரும் தங்களின் தீர்வை முன் வைப்பார்களா? சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் தீர்வு எதனையும் தரப்போவதில்லை என்பது வரலாற்று உண்மை. எமது தேசியத் தலைவரின் காலத்தில் தமிழீழம் அமைத்து சுதந்திரத்துடன் வாழ அனைத்து மக்களும் குரல் கொடுப்போம் இந்த எழுச்சி நாளாக இம் முறை மே நாள் விளங்கட்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

(32,சோ)

## சட்ட விரோத மின் பாவனையாளர்களுக்கு அபராதம்

மன்னாரில் தற்சமயம் இலங்கை மின்சார சபையினர் களவாக மின்சாரம் எடுப்போர் மற்றும் பத்தாயிரத்திற்கு மேல் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமல் இருப்போர் போன்றோரை இனங்கண்டு அவர்களது மின்சாரத்தை தற்காலிகமாக துண்டிக்கச்செய்ததுடன் களவாக மின்சாரம் எடுப்பவர்களுக்குத் தண்டனைப் பணமாக 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை ஆபராதம் விதிக்கவும் ஒழுங்கு செய்துள்ளனர். -(18)



சுனாமி அனர்த்தத்தினால் மரணமடைந்த அமரர் இராசையா மகேஸ்வரி (வத்திராயன் வடக்கு தாளையடி) அவர்களின் ஞாபகார்த்தமாக கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கருகாமையில் அவரது பிள்ளைகளால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பு நிலையத்தினை நேற்று முன்தினம் கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். பேருந்து தரிப்பு நிலையத்தின் பெயர்ப் பலகையினை தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த இளஞ்சேரன் திரை நீக்கம் செய்து வைப்பதனைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

## விவசாய அமைப்புக்களின் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாய அமைப்புக்களின் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் பெரிய மடு பாடசாலைக் கட்டடத்தில் இடம்பெற்றுள்ளது. காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலினை மன்னார் மாவட்ட சமாதான அமைப்புக்களின் ஒன்றியமும் கெயர் நிறுவனமும் இணைந்து நடத்தின.

இதற்கு மன்னார் மாவட்ட பிரதிக்காணி ஆணையாளரும் சமாதான அமைப்புக்களின் தலைவரு[illegible] அன்ரன் மார்க் தலைமை தாங்கினார். இதன் போது முக்கிய விடயமாக விவசாய உற்பத்தியைப் பெருக்குதல, தரமான விதை நெல்லை விவசாயி[illegible]க்கு அறிமுகம் செய்தல், இராணுவம் தங்கியி[illegible] விவசாய நிலங்க[illegible] மீளப் பெறல் போன்ற விடயங்கள் கலந்தா[illegible]பட்டதுடன் மு[illegible] தீர்மானங்கள் பலவும் எடுக்கப்பட்டன. (18)

## கிராமிய அபிவிருத்திச் செயலக அடிக்கல் நாட்டு விழா

(செட்டிகுளம்)

நிகொட் நிதியுதவியுடன் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பூம்புகார் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் "கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்" ஒரு பகுதியாக கிராமிய அபிவிருத்திச் செயலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி நடைபெற்றது.

காலை 9.00 மணியளவில் நடைபெற்ற இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட த.பு.கழக மாவட்டப் பணிப்பாளர்.எஸ்.டி.மூர்த்தி புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார். பூம்புகார் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள இப்புதிய கிராம அபிவிருத்திச் செயலகக் கட்டடத்தில் நூல் நிலையம், பொது நோக்கு மண்டபம், கிராம மட்ட அமைப்புக்களுக்கான அலுவலகம், கிராம சேவையாளர் அலுவலகம் ஆகியவை இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## மாதாந்த கலந்துரையாடல்

(முல்லை)

முல்லை.மாவட்ட அரசாங்க அதிபரின் மாதாந்த கலந்துரையாடல்கள் இன்று நடைபெறுமென முல்லை.மாவட்ட அரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் முற்பகல் 9.00 மணிக்கும், அவசர புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நீர்ப்)முற்பகல் 10.00 மணிக்கும் உலக உணவுத்திட்டக் கூட்டம் முற்பகல் 11.00 மணிக்கும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நண்பகல் 12.00 மணிக்கும், யு.என்.,டிபியின் ஐ. ஆர், ஆர். பி.திட்டக் கூட்டம் பிற்பகல் 1.00 மணிக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கும், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கூட்டம் பிற்பகல் 3.00 மணிக்கும், அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் பிற்பகல் 4.00 மணிக்கும் நடைபெறவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். இக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

-அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம்-

## வீடுகளை விரைவாக அமைத்துத்தருமாறு சுனாமியால் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் கூடாரங்களில் வாழும் மக்கள் தமக்குரிய வீடுகளை விரைவாக அமைத்துத் தருமாறு அங்கு வந்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக்ரணவிராஜாவைக் கேட்டுக் கொண்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை திலக்ரணவிராஜ திருகோணமலைக்கு விஜயம் செய்த போதே மக்கள் இவ்வாறு கேட்டுள்ளனர்.

இதன் போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தற்காலிக வீடுகள்அமைக்கப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்களை வெகு விரைவில் தற்காலிக வீடுகளில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார் குறிப்பாக கூடாரங்களில் வாழும் மக்கள் கடும் கோடை மற்றும் பருவம் தப்பிய மழை காரணமாகவும் நுளம்புத் தெல்லை என்றனவற்றாலும் பாதிக்கபட்டுள்ளனர். பெருமளவிலான குடும்பங்கள் வீதியோரங்களை அண்டிய, முகாம்களிலும், கூடாரங்களிலும் வசித்து வருகின்றனர். இம் மாவட்டத்தில் வாழும் 90,000 குடும்பங்களில் 30,000 குடும்பங்கள் சுனாமியால் வீடுகளையும், சொத்துக்களையும் ஒன்றில் முற்றாக அல்லது ஓரளவு இழந்துள்ளனர். 8,190 வீடுகள் முற்றாகவே காவு கொள்ளப்பட்டு விட்டன. இந்த மாவட்டத்திற்கு இரண்டாவது தடவையாக வந்துள்ள ஆணை யாளர் நாயகம் கூடாரங்களில் வாழும் மக்களையும் சந்தித்து உரையாடியுள்ளார். இதன் போது அருட்தந்தை டயஸ் அடிகளாருடன் கரிராஸ் நிறுவனத்தினரால் அமைக் கப்பட்டு வரும் தற்காலிக குடியிருப்புக்களையும் பார்வை யிட்டுள்ளார்.

## துணுக்காய் பொதுச் சந்தை மதுபானச் சாலையாக மாற் வரும் அவலம்

துணுக்காய்ப் பொதுச் சந்தையில மதுபானம் பாவிப்பவர் களினால் பொதுச்சந்தை மதுச்சாலையாக மாறிவருகின்றது. இதன்காரணமாக சந்தைப்பகுதிக்கு நுகர்வுப் பொருட்களைப் பெற வருவோர் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்

மேற்படி சந்தைப்பகுதிக்கு மிக நெருக்கமாக மதுபானச்சாலை ஒன்று இருக்கிறது . மது அருந்து பவர்கள் மதுவை எடுத்துச் சென்று சந்தையின் உட்பகுதியில் இருந்து மது அருந்திவிட்டு தகாத வார்த்தைகளில் சந்தைப்பகுதிக்கு வருவோர் போவோர்களை ஏசிவருவதால் நுகர்வுப்பொருட்களை பெறவருவோர் பல சிக்கல்களினை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் மதுபானப் போத்தல்களை அவ்விடத்திலேயே உடைத்து சந்தைப்பகுதியை சீரழித்து வருவதால் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (24)

## கருத்தூட்டல் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையின் முன்னேற்பாடுகள் தொடர்பாக முல்லை மாவட்டத்திற்குட்பட்ட கிராம அலுவலர்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முல்லை. மாவட்ட அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி ப.ஆரணி தலைமையில் ஆரம்பமானது.

இதில் நடமாடும் சேவையின் செயற்பாடு தொடர்பாக கச்சேரியின் பிரதம கணக்காளர் விளக்கமளித்தார். இக் கருத்தூட்டல் நிகழ்வில் முல்லை மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச உதவி அரச அதிபர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# வடமராட்சியில் மே நாளினை எழுச்சிகரமாக நடத்த ஏற்பாடு

(வடமராட்சி)

**யாழ்.வடமராட்சிப் பகுதியில் மேநாள் நிகழ்வுகளை இம்முறை மிகவும் எழுச்சி கரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இம் மே நாள் நிகழ்வுகளில் வடமராட்சிப் பகுதிகளிலிருந்து சுமார் 40 வரையான ஊர்திகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வட மராட்சிப் பிரதேச தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ் உழைப்பாளர்களின் உரிமைக் குரலை, தமிழ்த்தேசியத்தை வலியுறுத் தும் குரலாக உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்யும் நாளாக யாழ். குடாநாட்டில் மே நாள் அனுஷ்டிக் கப்படவுள்ளது.



கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற முதியோர் கௌரவிப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மா.வை சேனாதிராசா பொன்னாடை போர்த்தி முதியவர் ஒருவரைக் கௌரவிக்கின்றார். (41)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக சமகால அரசியல் கருத்தரங்குகளும்,மே தின எழுச்சிக் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

நிகழ்கால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், மாறிவரும் அரசியல் இராணுவச் சூழ்நிலைகளுக்கேற்ப மக்கள் நிலைமைகளை விளங்கிக் கொள்ளவும் அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களிடையேயான சந்திப்புக்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.இப்பணிகளில் பொது அமைப்பின் பிரதிநிதிகள், கோட்ட,பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், தேசிய எழுச்சிப் பேரவை பேராளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (28)

# படை முகாம்களுக்கு அருகில் குடிநீர் குழாய்; பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபையால் நிறுவப் பட்டு வரும் குடிநீர் குழாய்கள், படை முகாம்களுக்கு அருகிலும், மக்கள் குடியிருப்புக்கள் குறைந்த பகுதி களிலும் அமைக்கப்பட்டுள்ளமைக்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித் துள்ளனர்.

சாவகச்சேரி தபால்நிலைய வீதியி லுள்ள படை முகாமுக்க ருகில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயில் பெண்கள் சென்று நீர் எடுக்க முடியாத நிலை தொடர்பதாவும், மற்றும் சில இடங்களில் மக்கள் செறிவான பகுதியில் குடிநீர் குழாய்கள் அமைக்கப்படவில்லை என்றும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (28)

# குடும்பஸ்தரைக் காணவில்லை; ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்செழுப்பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முன்தினம் முறையிடப்பட்டுள்ளது.

அச்செழு வடக்கு நீர்வேலிப்பகுதியைச் சேர்ந்தவரும் கிளிநொச்சி ஆனந்தநகர்ப் பகுதியில் வசித்து வந்தவருமான செல்வராஜா செல் வரஞ்சன் (வயது 26) என்ற இருபிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இவர் காணாமல்போன சம்பவம் குறித்து சிறிலங்கா இராணுவத்தின் மீதும் முறைப்பாட்டாளர் களால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (33)


# கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்க நகர சபை செயலாளர் உத்தரவு

(தென்மராட்சி)

யாழ். சாவகச்சேரி நகரசபை எல்லைகளுக் குட்பட்ட பொதுச் சந்தை, பொது இடங்கள் மற்றும் வீதிகள், விளைநிலங்கள் என்பன வற்றில் காணப்படும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்குமாறு சாவகச்சேரி நகரசபைச் செய லாளர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு நகர சபையினரால் கையகப்படுத் தப்படும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் விடுவிக்க வேண்டுமெனின் தண்டப் பணம் செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது.

வீதி விபத்துக்களைத் தடுக்கவும் விளை நிலங்கள் சேதமாக்கப்படுதைத் தடுக்கவுமே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (28,33))



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவன் ஒருவருக்குத்தங்கப்பதக்கத்தை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (41)

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் கடற்றொழிலாளருக்கு கடனுதவி

யாழ்.குடாநாட்டிலுள்ள கடற்றொழிலாளர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடனுதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் முன்வந்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் பிரதேசரீதியாகவிருக்கும் 11 கடற்றொழிலாளர் சங்கசமாசங்களூடாக இக்கடனுதவித்திட்டங்களை அமுல் செய்ய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி ஆழிப்பேரலைஅனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தொழில் மேம்பாட்டை நோக்காகக் கொண்ட இக்கடனுதவித்திட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட ஸ்தாபனம் 22 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (33)

## உதவி வழங்கல்

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பி யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கான பாவனைப்பொருட்களை அகதிக ளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் வழங்கிவருகிறது.

அந்தவகையில் இவ் அகதிக ளுக்கு ஐக்கியநாடுகள் தூதுவராலயத் தினால் சமயற்பாத்திரங்கள், பாய் கள், படுக்கை விரிப்புக்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. (33)

## கூட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டமும் அரசியல் விவகாரத் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சும் இணைந்து உருவாக் கியுள்ள நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் பிராந்தியக் கூட்டம் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (33)

# தையல் இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசச் செயலாளர் பிரிவில் வசிக்கும் 14 குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தலா ஒவ்வொரு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களைக் குடும்பத்தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட புனர்வாழ்வு நல்லிணக்க செயலகத்தினால் இவை வழங்கப்பட் டுள்ளன. (33)

# கால்நடை வளர்ப்போர் சங்கத்தை மீண்டும் இயங்க வைக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப் போர் நலன்புரிச் சங்கத்தினை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கால் நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக இச் சங்கம் செயற்பாடுகள் இன்றிக் காணப் படுகின்றது. இதனை இயங்க வைப்ப தன் மூலம் இப்பகுதியில் கால்நடை அபிவிருத்திகளை மேற்கொள்ள முடி யும்.

கால்நடைவளர்ப்பிற்கேற்ற பிர தேசமாக தென்மராட்சிப் பிரதேசம் காணப்படுவதுடன் பெருமளவான கால்நடை வளர்ப்பாளர்களும் இப் பிரதேசத்தில் வாழ்கின்றனர்

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் தீவிர அக்கறை செலுத்தி இச்சங்கத்தினை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுப்ப துடன் இப்பகுதி கால்நடை அபிவிருத்திக்கான நடவடிக்கைக ளிலும் ஈடுபடவேண்டுமென கால்நடை வளர்ப்போர் கோரியுள்ளனர். (28)

# சட்டவிரோத மண் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலிப்பகுதியிலுள்ள கைத்தொழில் பேட்டையை அண்டியுள்ள பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றது.

இதனால் இப்பகுதியிலுள்ள காணிகளில் பல பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாக இந்நிலப்பரப்பு மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்புடையதாக இல்லாது போகின்றது. இதனைத் தடுக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (33)

## வாழைகளுக்கு நோய்

(நல்லூர்)

கோப்பாய் கட்டுவன், தெல்லிப் பளை,மல்லாகம் நீர்வேலிப்பகுதிக ளில் உள்ள வாழைத்தோட்டங் களில் குருக்கன் நோய் அதிகமா கக் காணப்படுகின்றது.

சீரற்ற கால நிலைமை காரண மாக இக்குருக்கன் நோய் ஏற்படு வதாக விவசாயிகள் தெரிவிக்கி றார்கள். இக்குருக்கன் நோய் காரணமாக வாழைச் செய்கையா ளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார் கள். (41)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 403 குடும்பங்களுக்கு உதவி

கற்கோவளம் மற்றும் பளை கிழக்குப் பகுதிகளிலுள்ள நான்கு முகாம்களைச் சேர்ந்த 403 குடும்பங்களுக்கு அகதிகள் புனர் வாழ்வு நிறுவனத்தினரால் ஒவ் வொரு குடும்பங்களுக்கும் தலா நான்கு நாற்காலிகள் வழங்கப் பட்டுள்னன.

ஆழிப்பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இக் குடும்பங்களின் பாவனைக்கான தளபாடத் தேவைகளைக் கவனத்தில் கொண்டே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் இவை வழங்கப்பட் டுள்ளன. (33)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோரிடம் தேவைக்கணிப்பீட்டு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைக்கணிப்பீட்டு நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியம் தேவையானவற்றைக் கணிப்பீடு செய்து அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இத்தேவைக்கணிப்பீட்டு நடவடிக்கைகளை யாழ்.வடமராட்சிப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (33)

◆ **ஆனையிறவுப்** படைத்தளத்தின் தென்பகுதி முன்னணிக் காப்பரணாக விளங்கிய பரந்தன் பகுதி காப்பரண்கள் தென்னாசியாவிலேயே மிகப் பலம்பொருந்திய இராணுவக் காப்பரணாக உள்ளதென அன்று இராணுவ ஆய்வாளர்களால் கூறப்பட்டது. இக் காப்பரண்களை நீங்கள் தாக்கி அழிக்கின்ற சந்தர்ப்பத்தில் எதிரியின் தாக்குதல்கள் எவ்வாறு அமைந்திருந்தது? அதற்கான எதிர்த் தாக்குதல்களை நீங்கள் எவ்வாறு மேற்கொண்டீர்கள்?

*ஆனையிறவுத் தளத்தின் முன்னணி காப்பரண்களின் வரிசையில் பரந்தன் காப்பரணும் முக்கியத்துவமானது. உண்மையிலேயே ஆனையிறவினதும், அதனைச் சூழவிருந்த தளங்களினதும் பலம் என்பது உலக இராணுவ வல்லுநர்களாலும், சிறிலங்கா இராணுவத்திற்கு பயிற்சி வழங்கிய இராணுவப் பயிற்சியாளர்களாலும் இது ஒரு வெற்றிகொள்ள முடியாத அளவில் இதன் பலமும் பரிணாமமும்

கைப்பற்றத் தொடங்கினோம். ஆரம்பத்திலேயே நாங்கள் முதலாவது நகர்வை செய்யும்போது எமக்கு கடுமையான எதிர்ப்புக் கிடைக்கவில்லை. அதாவது, நாம் உள்நுழைய வேண்டிய பாதையை உடைத்து அணிகள் அந்தப் பகுதிக்குள் நுழையும்போது எமக்கு எதிர்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால், அதனை உடைத்து முன்னேறிய பின் நாம் பிடித்த பகுதியை தக்கவைக்க முடியுமோ என்ற அளவிற்கு இராணுவத்தினரின் எதிர்ப்பு தீவிரமடைந்திருந்தது. பரந்தனின் இரு பக்க வாட்டு காவலரண் பகுதிகளாலும் நேரடியாகவும், அத்தோடு, அந்த நேரத்தைப் பொறுத்த வரையில் கனரக ஆயுதங்களை தூரத்திலிருந்தே பயன்படுத்தி எங்களை செயலிழக்க வைக்கக்கூடிய நேரமாகவும் இருந்ததானால், உடைத்து உள்நுழைந்து அப்பகுதியை விரிவாக்கிக் கொண்டு போகின்ற சந்தர்ப்பத்தில் எமக்கு மிகவும் பலமான எதிர்ப்புக் கிடைத்தது. எதிரியின் டாங்கி அணிகள் மிக மூர்க்கத்தனமாக எல்லாப் பகுதிகளாலும் எமது நகர்வை தடுத்துக் கொண்டிருந்தன. அதே நேரத்திலே ஆனையிறவுத் தளமானது மிகுந்த பலத்துடன் அதாவது, காவலரண்கள், ஆளணி, சூட்டாதரவு இந்த மூன்று வகையாலும் பலமாகவே இருந்தது. இப்பகுதியை நாம் உடைத்த அந்த நேரத்தில் இருந்து

கிவிட்டான். ஆகவே, அந்த இரண்டாவது அரணையும் உடைத்த பின்பு குறிப்பிட்ட நகர்வு இலகுவாக இருந்தது. ஆனால், இரசாயனத் தொழிற்சாலை முகாமை கைப்பற்ற முன்னர் அந்த முகாமிலிருந்து மீண்டும் அரண்களைப் பலப்படுத்தத் தொடங்கியிருந்தான். ஏனெனில், புவியியல் ரீதியாக இந்தப்பிரதேசம் கனரக ஆயுதத் தாக்குதல்களுக்கும் நிலையெடுத்திருப்பவர்களுக்கும் வாய்ப்பான பிரதேசம். ஆனால், நாம் நகர வேண்டிய கட்டத்திலிருந்தோம். எனவே, இந்த நிலையில், எமது போராளிகளின் உணர்வு, உத்வேகம், தியாகம் என்பனதான் இப்பகுதியை நாம் கைப்பற்றத் துணையாக இருந்தன.

◆ **பல கட்டங்களாக நடைபெற்ற இச்சமரில் திரும்புமுனையை ஏற்படுத்திய சமர் எதுவெனக் கூறமுடியுமா? அச்சமர் எவ்வாறு அமைந்திருந்தது?**

*ஆனையிறவின் வெற்றிக்குத் திருப்புமுனையாக அமைந்தது குடாரப்புவில் தரையிறக்கிய சமர் தான் வெற்றிக்கு மூலமாக வித்திட்ட சமராகும். அதாவது, நாங்கள் எதிரிக்குப் பின்னால் சென்று தரையிறங்கி அந்த விநியோகப் பாதையை நாங்கள் தடுத்து நிறுத்த ஆரம்பித்தது எதிரிக்கு பெரும் நெருக்கடியை

மறுநாள் காலை பாதை ஏற்படுத்துவதற்கான சமரை ஆரம்பிக்க வேண்டும். இதற்கிடையில் இராணுவமும் இருபத்தேழாம் திகதி மிகப் பெரிய நடவடிக்கை ஒன்றைச் செய்து, விட்ட பகுதியை மீளக் கைப்பற்றுவதற்குரிய திட்டத்தையும் போட்டிருந்தது. எமது இந்தத் தாக்குதல் நடைபெறாவிட்டால் முதல் அவர்கள் இழந்த கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப் பகுதிகளைப் பிடிப்பதற்குரிய பெரிய திட்டமொன்றை இட்டிருந்தனர். இதனால், நாம் பாதை திறக்கவேண்டிய அந்தப் பகுதிக்குள் கூடிய ஆளணியும் கூடிய கனரக டாங்கிகள், பவல்கள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து அங்கு தயார்ப்படுத்தி வைத்திருந்தார்கள். ஆனால், எமது திட்டப்படி இரண்டு நாட்களுக்குள் பாதையைத் திறந்து கொடுத்தே ஆக வேண்டும். ஆகவே, இது அப்போது ஒரு சவால் நிறைந்த சண்டையாகவே இருந்தது. இதன்படி 27ஆம் திகதி காலை நாங்கள் சண்டையை ஆரம்பித்துவிட்டோம். ஆனால், அன்று மாலை வரை 900 மீற்றர் பகுதியைத்தான் பிடிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், நாங்கள் கடற்கரையாக மூன்று கிலோ மீற்றர் பகுதியைப் பிடித்தால்தான் குறிப்பிட்ட பிரதேசத்தைப் பிடிக்க முடியும். ஏனென்றால் அப்பிரதேசம் கடலும் வெட்டையும், மணலும் சார்ந்த ஒரு பிரதேசம். ஆகவே, பகல் நகர்வுகளில் நிலையெடுத்திருப்பவர்களுக்கு வாய்ப்பானதாகவும், நகர்பவர்களுக்கு கஷ்டமான பகுதியாகவும் இருந்தது. ஆகவே, சரியான உத்தியின்றி நகர்ந்தால் நாங்கள் இழப்பையே சந்திக்க வேண்டிவரும். அத்தோடு,



**சிறிலங்கா இராணுவத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரும் படைத்தளமாகிய ஆனையிறவுத் தளம் விடுதலைப்புலிகளால் முற்றாக துடைத்தழிக்கப்பட்டு ஐந்தாவது ஆண்டு வெற்றி விழாவினை கண்டுள்ள நிலையில் அத்தளம் மீதான தாக்குதலின் போது நடந்த முக்கிய சம்பவங்களையும் அச்சமரில் ஏற்பட்ட திருப்புமுனைகளையும் எம்மோடு பகிர்ந்து கொண்டார் வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேனல் தீபன்.**




# பாதையைப் பிடிக்க வேண்டும் அல்லது சாகவேண்டும்

கொண்டதென கூறப்பட்டதை அறிந்துள்ளேன். அந்த வகையில், அத்தளத்தை நாம் தாக்க முற்படும்போது ஒரு வித்தியாசமான யுத்தி முறையை', அதாவது, புதிய தந்திரோபயத்தையே தலைவர் காட்டித் தந்தார். பரந்தன் பகுதியை உடைத்து ஆனையிறவின் மையப்பகுதியை நெருங்கும் வரைக்கும் ஒரு புதிய யுத்தியையே நாம் கையாண்டோம். அதுவும் ஒரு சவாலாகத்தான் அந்த இடத்தைக் கைப்பற்றினோம். ஏனெனில், இவ்வளவு பலப்படுத்தப்பட்ட அதுவும் பகல் நேரங்களில் முழுமையாக நகர முடியாது

நேர்காணல்:
**இ. சசிக்குமார்**
**வீ. பிரதீபன்**

என்று கருத்தப் படக்கூடிய ஒரு புவியியல் அமைப்பில் பகலிலேயே அந்தப் பகுதியை உடைத்துக்கைப் பற்றினோம் என்பது எமது போரியலில் ஒரு மாற்றமும், எங்கள் போராளிகளின் செயற் பாட்டிலும், அவர்களின் மனநிலையிலும் ஒரு மாற்றத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியது என்றுதான் என்னால் கூறமுடியும். அந்தச் சண்டையைப் பொறுத்தவரையில், நாங்கள் அந்தப் பகுதிக் காவலரண்களை தாக்கத் தொடங்கும்போது பகல் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் தான் அந்த உடைப்பைச் செய்தோம். அப்போது நாங்கள் எமது மறைமுக, நேரடிச் சூட்டு ஆயுதங்களை அந்தக் களத்தில் பயன்படுத்தி அக்காவலரண்களைத் தாக்கி செயலிழக்கச் செய்த நிலையில், ஊடறுப்பைச் செய்து முன்னேறி காவலரண்களை அழித்து அந்த பகுதியை

அவர்களின் சூட்டு ஆதரவு அதாவது, 'ஆட்லறி பவர்' மிகப பலமாகவே இருந்தது. இவ்வளவு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் நாம் கைப்பற்றிய அந்தப் பகுதியில் இருந்து முன்னேறுவது என்பது ஒரு கடினமானதாகவும், சவால் நிறைந்ததுமாகவே இருந்தது. அத்தோடு, அந்தத் திட்டமானது எமக்கு முக்கியமானதாகவும், அதை நிறைவேற்ற வேண்டும் என்ற குறிக்கோளும் இருந்தது. தலைவர் அவர்களிடமும் எம்மிடமும் எந்தத்திட்டத்தையாவது பயன்படுத்தி அந்தத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. அதனாலேயே, நாம் அந்த கடினத்துக்குள்ளும் எமது தந்திரோபயங்களாலும், எமது சூட்டு ஆதரவுகளின் செறிவாலும் நாங்கள் அதை முறியடித்து வந்தோம். பரந்தன் இராசயனத் தொழிற்சாலைப் பகுதியில் இருந்த பிரிகேட் தளம், உமையாள்புரம் பகுதியில் இருந்த ஒரு பிரிகேட் தளம் ஆகிய இரண்டு பிரிகேட் தளங்கள் நாம் முதற்கட்டமாக தாக்கிய பகுதிக்குள் இருந்தன. ஆகவேதான்,நாங்கள் மிகவும் கடின முயற்சி எடுத்து அந்தப் பகுதிகளைப் பிடித்தாலும் அவற்றைத் தக்கவைப்பதென்பது கடினமாக இருந்தது. நாங்கள் பிடித்த பகுதிகளை பின்பு எதிரி பிடிப்பதும், அதன் பின் நாம் கைப்பற்றுவதுமாக பல முறை முயன்றுதான் அப்பகுதியை நாங்கள் பிடித்தோம். சமரின் ஆரம்பத்தில் முல்லை வீதியையும், பின்பு பூநகரி வீதியையும் பிடிக்கும் வரை மிகக்கடுமையான எதிர்ப்பு எங்களுக்கு வந்தது.

அடுத்து ஆனையிறவில் இருந்தும் மேலதிக உதவி அணிகளை எதிரி பெற்று முல்லைத்தீவு, பூநகரி வீதிகளையும் உடனடியாக நிலைகளை அமைத்து பலப்படுத்தத் தொடங்

ஏற்படுத்தியது. ஆகவே, இதுதான் ஆனையிறவின் இறுதி வெற்றியின் சமராக அமைகிறது. அதாவது, ஆனையிறவுப் பகுதியைக் கைப்பற்ற தலைவர் இரண்டு திட்டங்களையிட்டார். தரையிறங்கி ஆனையிறவுக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே விநியோகத்தைத் துண்டிப்பது, உதவிப் படைகளையும் தடுப்பது ஒரு திட்டம். அந்தத் திட்டம்தான் குடாரப்பு தரையிறக்க திட்டமாகிய முதலாவது கட்டம். இது இரகசியமாக ஊடுருவி அவர்கள் நிலைப்பட்டவுடன் ஆனையிறவுப் பகுதிகளை தாக்கியழிப்பது. இந்தத் தாக்கியழிப்புத் திட்டத்தினை நான் பொறுப்பேற்றிருந்தேன். தரையிறங்கும் திட்டம் கேணல் பால்ராஜின் தலைமையில் நடந்தது. தரையிறங்கிய பின் என்னுடைய நடவடிக்கை அவர்களுக்குரிய தரைவழிப்பாதையை அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனெனில், கடலால் தரையிறக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட அளவு பொருட்களுடன்தான் அவர்கள் சென்றிருந்தார்கள். அதன்பின் தொடராக சண்டையிட விநியோகம் முக்கியமாகவிருந்தது. இதற்குப் பெரிய பலமான ஒரு பகுதியை நாம் உடைத்துக் கொடுக்க வேண்டியிருந்தது. அது தாளையடியில் அமைந்திருந்த பொக்ஸ் என குறிப்பிடுகின்ற பகுதியாகிய அதாவது, கடற்கரையை மறித்து கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்ட ஒரு பகுதி அந்தப் பகுதிக்குள் ஐம்பத்து மூன்றாவது டிவிசன் கொமாண்டோ அணி நிலை கொண்டிருந்த பகுதி. இவற்றை உடைத்து அழித்தால்தான் தரையிறக்கப்பட்டவர்களுக்கான தரை விநியோகம் அங்கு நடக்கும். எமது நடவடிக்கையில் முதல் கட்டமாகிய இந்தத் தரைவழி விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் சண்டையில் அதாவது, 26.03.2000 ஆம் ஆண்டு அந்த அணி தரையிறங்க நாங்கள்


எதிரியிடம் டாங்கி வலு்வும் அங்கேயே பலமாக இருந்தது. நாங்கள் இருபத்தேழாம் திகதி காலை ஆறு மணிக்கு ஆரம்பித்து இரண்டு பக்கமாக நகர்ந்து கொண்டிருந்தோம். ஒரு பக்க நகர்வு சிறிது பின்னடைவாகவே இருந்தது. மறுபகுதி 900 மீற்றர் வரை சென்றுவிட்டது. ஆனால், மதியத்திற்கு பிறகு நாங்கள் கைப்பற்றிய பகுதியை இராணுவத்தினர் பதில் தாக்குதல் செய்து கைப்பற்றிக் கொண்டுவர ஆரம்பித்தனர். அவர்களோடு எமது அணிகளும் மிக உக்கிரமாக சண்டையிட்டுக்கொண்டு பின் நகர்ந்து கிட்டத்தட்ட 900 மீற்றரில் அறுநூறு மீற்றரை இழந்துவிட்டோம். இந்த நேரத்தில் எமக்கு சவால்கள் அதிகரித்துக் காணப்பட்டது. மறுபுறம் தரையிறங்கிய 1200 பேருக்குரிய விநியோகத்தை தரைவழியாகக் கொடுத்தே ஆகவேண்டும். இது கொடுக்காமல் விடப்பட்டால் அந்தச் சண்டையை நடத்த முடியாது. இதேநேரத்தில் அவர்களுக்கான கடல் வழி விநியோகமும் நெருக்கடிக்குள்ளாகிவிட்டது. அத்துடன் கடல்தாக்குதலையும் எதிரி அதிகரித்திருந்தான். இதேவேளை, தரையிறங்கிய 1200 பேருக்கும் அழுத்தம் அதிகரித்த அதேவேளை, அவர்களுக்கான விநியோகத்தை வழங்க வேண்டிய முக்கியத்துவமும் எமக்கு அதிகரித்தது. ஏனெனில், அந்த ஆயிரத்தி இருநூறு பேரினதும் உயிரும் கிட்டத்தட்ட எமது கையிலென்ற நிலைக்கு மாறிவிட்டது. இதனால், எமது நகர்வினுடைய தந்திரோபாயங்களை மாற்றி எமது நகர்விற்கான மாற்றுத் திட்டங்களை வகுத்து வேவு ரீதியாக நகர்ந்தும் ஏனைய இடங்களில் புதுநிலைகளை அமைத்தும் ஆளணிகளை கூட்டியும் 29ஆம் திகதி மீண்டும் தாக்குதலை ஆரம்

(7ஆம் பக்கம் பார்க்க)

# நவீன அரசியல் நடவடிக்கைகளும் உலகம் ஏற்கும் புதிய தலைமையும் தேவை

**நந்திகொடகே- லங்காதீப**
**மொழியாக்கம்:- அ.சக்திவேல்**

**எமது** நாடு பழைய அரசியலையும் பழைய அரசியல் வாதிகளின் அடிச் சுவட்டையும் பின்பற்றியதன் காரணத்தி னால் அரசியல் நடவடிக்கைகள் யாவும், மிகப் பலவீனமடைந்துள்ளன. இப்பொழுது எமக்கு பழைய அரசியல் தேவையில்லை. தேவை நவீன அரசியல் நடவடிக்கை களாகும். உலகம் ஏற்றுக்கொள்ளும் புதிய தலைவர்களும் இந்த நாட்டுக்குத் தேவைப் படுகின்றனர். 1994ஆம் ஆண்டு சந்திரிகா



குமாரதுங்க பதவி ஏற்ற பின் ஆர். பிரேம தாஸா ஜே.ஆர் ஜயவர்த்தானா யுகம் முடி வடைந்து நாடு சுபீட்சமடையுமென எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை நாடு மீண்டும் பதாளத்தில் தள்ளப்பட்டுள் ளது. சில மாதங்களுக்கு முன் எமது நாட்டு பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு சிறந்த கல்வி அறிவு தேவையில்லை என பாராளு மன்றத்தில் சிலரால் கூறப்பட்டதையிட்டு எமது நாடு வெட்கித் தலைகுனிய வேண்டும். ஒரு நாட்டின் அரசியலை நடத்துவதற்கு அந் நாட்டில் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு கல்வி அறிவு தேவையில்லை எனக் கூறியவர்களின் மூளையை முதலில் சலவை செய்வது மிக அவசியம். நாடடின் ஆட்சி யைத் திறம்பட நடத்துவதற்கு கல்வி மான்கள் மிகவும் அவசியம் என கிரேக்க தத்துவ ஞானி பிளாட்டோ கூறியுள்ளார். இதைக் கூறியவர்கள் அரசியல் மந்தை களுக்குச் சமனானவர்கள் என நான் கருதுகிறேன்.

எமது நாட்டின் சிறந்த கல்விமான்கள் பத்திரிகைகளில் பல அரசியல் கட்டு ரைகளையும், அறிக்கைகளையும் யதார்த்த மாக எழுதி தற்போதைய அரசியல் நிலையை மாற்றியமைக்க வேண்டும் எனப் பல முறை கூறியுள்ளார்கள். தற்போதைய இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வைக் காணுங்கள் என அரசியல் உயர் பீடங்க ளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் கூறியுள் ளனர். சுனாமிப் பேரழிவிற்குப் பின் எமது நாட்டுத் தலைவர்களின் பல அறிக்கை களையும் மேடைப் பேச்சுக்களையும் கேட்ட எமது நாட்டு மக்கள் இனி எமது அரசியல் தலைவர்கள் கட்சி பேதங்களையும், அரசியல் குரோதங்களையும் மறந்து நாட்டில் நல்லதொரு அரசியலை ஏற்படுத்து வார்கள் என நம்பினர். ஆனால் இது போலி நாடகம் எனத் தற்போது மக்கள் அனைவரும் உணர்ந்துள்ளார்கள். அன்று தொடக்கம் இன்று வரை இதில் மாற்றங்கள் கிடையாது. வாக்களித்த மக்களைப் பலிக்கடா வாக்கியுள்ளார்கள். எவ்வளவு கட்டுரைகள் எழுதினாலும் இதில் எந்தப் பயனும் இல்லை.

இரண்டு பிரதான கட்சிகளும் மாறுபட்ட அரசியற் கொள்கைகளைக் கடைப்பிடிப் பவர்கள். ஆனால் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்று அதன் படி அரசியல் கொள்கைகளைக் கடைப் பிடிக்கின்றனர். வெளிநாட்டு அரசியல் கொள்கைகளில் மாற்றங்கள் இல்லை. இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். என்ற நோக்கம் உடையவர்கள் இரண்டு கட்சிகளும் இணைந்து இனப்பிரச்சினை யைத் தீர்த்து வைக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்க வேண்டும். ஆனால் இவர்களின் அரசியல் அணுகுமுறைகளின் பலவீனம் காரணமாக இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் உள்ளது. தென்பகுதியில் இனப் பிரச்சினையை முறையாக அணுகியிருந்தால் நோர்வே இதில் தலையிட்டிருக்காது மனதில் சந்தேகங்களை வைத்துக் கொண்டால் இப் பிரச்சினையைத் தீர்ப்பது மிகக் கடினம் திறந்த மனப்பான்மையுடன் செயற்பட்டால் இப் பிரச்சினையைத் தீர்ப்பது அவ்வளவு கடினமாக இருக்காது தங்களின் அரசியல் லாபங்களைக் கருதி ஆட்சிக் காலத்தில் பெரும் கோடீஸ்வரராகும் கொள்கைகள் இவர்களின் இடத்திலுள்ளது.

எமது நாட்டில் அரசியல் வாதிகளினால் பாதாள உலகக் கோஷ்டிகள் இயங்கி வரு கின்றன. இவர்கள் அரசியல் வாதிகள் அல்ல. பாதாள உலகக் கோஷ்டியின் பயங் கரவாதிகள்.

எமது நாட்டின் அரசியல் வாதிகள் பழி வாங்கும் அரசியல் முறையைக் கடைப் பிடிப்பதை நிறுத்தாவிட்டால் எதிர்வரும் பொதுத் தேர்தல் நாட்டில் பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்தும் இதைத் தடுப்பது மிகக் கடினமான விடயம்.

இது ஒரு பௌத்த நாடு என நாம் கூறிக் கொள்கின்றோம். ஆனால் எமது நாட்டு அரசியல் வாதிகள் பௌத்தர்களாக நடப் பதில்லை. மற்றவர்களை பற்றிப் பொறாமைப் படுவதும் பழிவாங்குவதும் நோக்கமாகவே உள்ளனர். ஏனையவர்களைப் பற்றி கருணை காட்டுவதில்லை. வடகிழக்கு பிரச்சினைகளுக்கு யுத்த மூலம் தீர்வு காண வேண்டும் என்று பௌத்த அமைப்புக்கள், பௌத்த அரசியல் பிக்குமார்கள் கூறி வருகின்றனர். இதுவா இந்த நாட்டின் புத்த தர்மம்? புத்தர் இவற்றையா போதித்தார்? நீதி தர்மத்தை போதித்தார் அகிம்சையைப் போதித்தார். இவைகள் யாவும் இங்கு கடைப்பிடிக்கப்படுகின்றதா?

அரசியல் வாதிகளின் சகல ஆட்டங் களுக்கும் பொதுமக்களே முதலில் பலியாகின்றனர். உதாரணமாக மக்கள் ஆணை இல்லாமல் மற்றக் கட்சிகளுடன் நாட்டில் ஒப்பந்தங்கள் செய்கின்றனர். இவர்கள் எங்களின் வாக்குகளினால் பாராளுமன்றம் செல்கின்றனர். எங்களைக் கேட்டுக் கொண்டா ஒப்பந்தம் செய்கின்றனர். இவர்களுக்கு வாக்களித்து எங்களின் உரிமையை விட்டுக் கொடுப்பதா? பொது மக்களாக முன்வந்து சந்தர்ப்ப வாத அரசியல்வாதிகளை விரட்டியடிக்க வேண்டும் சொந்த நலன் கருதி பொது மக்களைப் பலிக்கடாவாக்கும் அரசியல் வாதிகளுக்கு நல்லதொரு பாடம் புகட்டு வதற்கு மக்களாகிய நாம் அணிதிரள வேண்டும்.

1978ஆம் ஆண்டு சர்வாதிகார அரசியல் யாப்பினை நாங்கள் ஏற்றுள்ளோம். இந்த யாப்பினால் இன்று நாடு பெரும் சீரழிவைச் சந்தித்துள்ளது. இதை நாங்கள் மீண்டும் அதுமதிக்க வேண்டுமா? இவர்கள் நாட்டை ஆட்சி புரிய மீண்டும் நாங்கள் அனுமதி வழங்கினால் அரசியல் வாதிகள் எங்களை மாட்டு மந்தைகளாகக் கணக்கெடுப்பார்கள். ஆகவே நாங்கள் அரசியலுக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும். அரசாங்கத்தை மாற்று வதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்று கூடினால் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளை விரட்டியடித்து நல்லதொரு ஆட்சியை நாங்களே நியமிக்கலாம் முன்னைய நீதி அமைச்சர் ஜி.எல் பீரிஸ் அவர்கள் டொனமோர் ஆட்சி முறையை கொண்டுவர முயன்றார். இந்த டொனமோர் ஆட்சி முறையில் நல்ல அம்சங்கள் இருந்தன. இவற்றை அமுல்ப் படுத்துவதற்கு அரசியல்வாதிகள் இடம் கொடுக்கவில்லை. இதனை நடைமுறைப்படுத்தியிருந்தால் நாட்டில் இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருக்காது நாட்டில் சட்ட ஒழுங்குகள் மிகவும் சீர்குலைந்துள்ளது. உலகம் ஏற்றுக்கொள்ளாத கல்வி முறை எமது நாட்டில் தான் உள்ளது. நாட்டில் விவசாயம் மிக மந்த நிலையாகவேயுள்ளது. புதிய யுகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். சகல மக்களையும் ஒன்றிணைக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவித்து வெளிநாடுகளுடன் ஒன்றிணைந்து எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.



ஐம்பது வருடகாலமாக நாம் முன் னோக்கிப் போகவில்லை. பின் நோக்கியே சென்று கொண்டிருக்கின்றோம். ஒரு பலம் இல்லாத அரசாங்கத்தால் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. நாட்டில் நல்ல அரசியல் வாதிகளை ஒன்றிணைக்க வேண்டும். நாட்டில் யுத்தத்தை நிறுத்தி பேதங்களை மறந்து நாட்டைக் கட்டியெழுப்ப சகலரும் கைகோர்த்து செயற்பட்டால் இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது யுத்தத்தினால். இந்த நாட்டை மீண்டும் சீரழிக்க இடம் கொடுக்க முடியாது. இவற்றுக்கெல்லாம் நாட்டின் அரசியல் வாதிகள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

---

## பாதையைப் பிடிக்க....

பித்தோம். இத்தாக்குதலின் உக்கிரத்தால் எதிரி பின்வாங்க மூன்றாம் நாள் இப் பாதையை நாங்கள் முற்றாகக் கைப்பற்றினோம். அது எங்களுக்கு ஒரு சவாலாகத்தான் இருந்தது. இவ்வளவு பேரும் வீழ்ந்தாலும் அந்தப் பாதை திறபடவேண்டும் அல்லது இவ்வளவு பேரும் விழவேண்டும். ஏனென்றால் அந்த ஆயிரத்தி இருநூறு பேரும் எங்களுடைய விநியோகத்தை நம்பி நின்றதால் முதல் நாள் எமது திட்டத்தில் பின்னடைவு வந்தவுடன் எமக்கான அழுத்தம் அதிகரித்தது. நாம் கைப்பற்றிய இடங்கள் மீளவிடுபட்டதும் எமக்கு நெருக்கடி நிலைகள் ஏற்பட்டது. ஆகவே, மூன்றாவது நாள் எம்மோடு நின்ற தளபதிகள் லெப். கேணல் சேகர், அறிவு, கடற்புலிகளைச் சேர்ந்த வினோத் எல் லோருமாக முடிவெடுத்து நாம் ஒவ்வொரு வரும் சாக வேண்டும் அல்லது பாதையைப் பிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தொடர்ந்தோம். ஆகவே, ஒவ்வொருவருடைய அந்த மூர்க்கத்தனமான முடிவும் போராளிகளின் மன உணர்வுகளும் உறுதியும இரண்டில் ஒன்றைக் காண வேண்டும் என்ற எண்ணத்தோடும் சண்டை செய்யும்போது எமக்கு வெற்றி கிடைக்கிறது.

**◆ ஆனையிறவுத் தளத்தின் உட்பகுதியை தாக்கியழிக்கின்ற சந்தர்ப்பத்தில் ஏனைய தாக்குதல்களினால் நிலைகுலைந்திருந்த படையினரின் எதிர்ப்பு எவ்வாறு இருந்தது?**

* நாங்கள் நேரடியாக தளத்தினுள் உட்புகவில்லை. முதற்கட்டமாக குடாரப்பில் இறங்கி விநியோகப் பாதையை துண்டிக்க அடுத்த கட்டமாக ஆனையிறவில் அதேபோன்ற இன்னுமொரு துண்டிப்பை செய்ய வேண்டியிருந்தது. குடாரப்புப் பகுதி இரகசிய ஊடுருவல் மூலம் விநியோகப் பாதை துண்டிக்கப்பட்டது. ஆனால் இங்கு எதிரியின் காப்பரண்கள் முகாம்களை அழித்து உடைத்துக் கொண்டு சென்று புதுக்காட்டுச் சந்திக்கும், இயக்கச்சிக்குமிடையில் இன்னுமொரு ஊடறுப்பைச் செய்தோம். இதனூடாக தளம் முற்றுகையிடப்படுவது எதிரிக்கு விளங்கியிருந்தது. கிளாலியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் இடைவெளியிலிருக்கும்போது தொடர்ந்து சங்கத்தார் வயல் இயக்கச்சிப் பகுதிகளில் இருந்த முன்னணி காவலரண்களையும் தாக்கியழிக்கத் தொடங்கினோம். அத்தோடு வெளிப்பகுதி அரண்களையும் உடைத்துக் கொண்டு போகும் போது படையினருக்கு நிலைப்பாடு விளங்கிவிட்டது. இதனால், அவர்களின் நிலைகள் குழம்பிப்போக தமது இருப்பிடங் களை விட்டு தற்காலிக நிலைகளை அமைத்து சண்டையிடுகின்ற கட்டம் உருவானது. அத்தோடு, இராணுவத் தளபதிகளுக்கு விளங்கிவிட்டது. தாம் முற்றாக அழிக்கப்படபோகிறோமென்பது. இதனால், சண்டையிடுபவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்க ஏனையோர் அங்கிருந்து பின்வாங்க ஆரம்பித்தார்கள். நாங்கள் திரியாய் அம்மன் கோவிலடியிலிருந்து கிளாலி நோக்கி போய்கொண்டிருக்கும் போது கிட்டத்தட்ட மூன்று நாள் நடவடிக்கையாக கண்டி வீதியையும் புகையிரத வீதியையும் கடந்துபோய்க்கொண்டி ருக்கும்போது ஏனைய சங்கத்தார்வயல், இயக்கச்சி,கொம்படி முன்பகுதிகளுக்குள்ளாலும் எமது தாக்கியழிக்கும் அணிகள் உள்நுழைந்து கொண்டிருந்தன. இதனால், எதிரி பின்வாங்க ஆரம்பித்தான். நாங்களும், தாக்கிக் கொண்டு போகும்போது அவர்கள் பின்வாங்குவது தெரிந்தது. இதனால், நாங்கள் வேகப்படுத்திக் கொண்டு முகாமை நோக்கி ஓர் நகர்வை வேகமாக செலுத்தினோம். நாம் கிளாலியை அண்மித்த வேளையில் படையினர் பின்வாங்கிச் சென்றுக் கொண்டிருந்தார்கள். வாகனங்கள், ஆட்லறிகள் அனைத்தையும் நகர்த்திக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் வைத்து நாம் அடித்த அடியில்தான் ஆட்லறியை விட்டுவிட்டு ஓடினார்கள். அத்தோடு, பத்திற்கு மேற்பட்ட வாகனங்கள் அழிக்கப்பட அதில் பயணித்த இராணுவத்தினரும் இறந்துகிடந்தனர். அந்த இடத்தில்தான் ஆனையிறவுத் தளப் பொறுப்பதிகாரியாகவிருந்த பிரிகேடியர் பேர்சி பெர்னாண்டோவும் சாவடைந்து கிடந்ததைக் கண்டோம். தொடர்ந்து நாங்கள் அப்பகுதியில் நடததிய தாக்குதலில் பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**◆ ஆனையிறவு படைத்தளத்தின் வீழ்ச்சியானது இற்றைவரைக்கும் இராணுவ ரீதியில் எவ்வாறு நோக்கப்படுகிறது?**

* பொதுவாக ஆனையிறவுப் படைத்தளத்தி னுடைய வீழ்ச்சியானது சிறிலங்கா இராணு வத்திற்கு மனோ நிலை ரீதியாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் மிகவும் ஒரு உச்சக்கட்டப் பாதுகாப்போடு இருந்த ஒருதளமென்பதோடு பல ஆண்டுகளாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தளத்தையே எங்களால் காப்பாற்ற முடியாது போனதே என்றால் இனி இராணுவ ரீதியாக புலிகளை வெல்ல முடியாதென்ற செய்தியை இராணுவத் திற்கு மிகத் தெளிவாக அந்தச் சமர் விளங்கப் படுத்தியிருக்கின்றது. அதில் அந்தத் தெளிவை அடைந்திருப்பார்கள். ஏனெனில், இதன்பின் தீச்சுவாலை என மீண்டும் ஒரு நடவடிக்கை யைத் தொடர்ந்தனர். அதிலும், பாரிய பின்ன டைவைச் சந்தித்திருந்தனர். அந்த ரீதியாக புலிகளின் பாரிய இராணுவ ஆற்றலை வெளி உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததும் இந்த ஆனையிறவு சமராகத்தான் இருக் கின்றது. இராணுவ ஆய்வாளர்களும் அவ்வாறு தான் கருதுகிறார்கள். ஏனெனில், அந்தப் புவியியல் அமைப்பினைப் பார்க்க இராணுவ ஆய்வாளர்களும் வல்லுநர்களும் இத்தளத்தை ஒருபோதும் அழிக்க முடியாதென்றுதான் கூறி னார்கள். அந்தத் தளம் ஒரு குறிப்பிட்ட காலத் திற்குள் வேகமான முறையில் வீழ்த்தப்பட்ட தென்றால் புலிகளின் இராணுவ சக்தியை வெளிப்படுத்திய சமரும் இதுதான் என ஆய்வா ளர்கள் கருதுகிறார்கள். இது உண்மையானதும் தான் அத்தோடு, எமது போராளிகளைப் பொறுத்த வரையிலும் இந்த ஆனையிறவின் வெற்றியா னது இனி எந்தவொரு இலக்கானாலும் எங்க ளால் வெல்ல முடியும் என்ற ஒரு உணர் வையும் அந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தி யுள்ளது. இனி பலாலியென்றாலும் சரி அதை விட பெரிய தளமென்றாலும் சரி அனைத் தையும் இலகுவாக வீழ்த்துவோம் என்ற நம்பிக் கையையும் உத்வேகத்தையும் இந்த ஆனை யிறவு வெற்றி எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

## கணனி, இலத்திரனியல் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப்படவிருக்கும் கணனிப்பயிற்சி, இலத்திரனியல் பயிற்சி நெறிக்கான நேர்முகத்தேர்வு 30.04.2005 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவிருப்பதால் விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இடம்:- பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,பத்திமா சந்தி, 9 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

குறிப்பு:- இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். (5835)

## 31 ஆம் நாள் நீங்காத நினைவில்

மண் மகிழ 02 - 01 - 1976



கண்கள் நெகிழ 29 - 03 - 2005

### திருமதி ஜெயக்குமாரி ஜெயக்காந்தன்

*மகிழ்வுடன் உன் மகவைக் கையேந்தக்*
*காத்திருந்த எமையெல்லாம் – உம்*
*நினைவால் கலங்கித் தவிக்கவிட்டு*
*சென்று விட்ட எம் செல்வமே – எப்போதும்*
*உம் பசுமையான நினைவுகளைச் சுமந்து*
*பிரிவுத்துயரைச் சுமக்க முடியாது தவிக்கும் உறவுகள்*

இன்று (28.04.2005) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் றோட்,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர் (5918)

## 30.04.2005
## 60ம் நாள் நினைவு
### அந்தியேட்டி



### திருமதி. தர்மசரோஜினி பஞ்சரட்ணம்

**இரண்டாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.**

**ஓய்வுபெற்ற ஆசிரியை-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் நிலைக் கல்லூரி**

28.02.2005 ல் இறையடி சேர்ந்த திருமதி தர்மசரோஜினி பஞ்சரட்ணம் அவர்களின் 60ம் நாள் அந்தியேட்டிக் கிரியையும் மதிய போசனமும் 30.04.2005 சனிக்கிழமை கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மருதநகரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இத்தகவலை ஏற்றுக்கொண்டு சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். கால இடைவெளி போதாத காரணத்தால் தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம்.

அன்னார் நோயுற்றிருந்தபோது பேருதவி நல்கிய கிளிநொச்சி பொன்னம்பலம் வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், ஏனைய பணியாளர்களுக்கும் இறப்பின் பின் பல வழிகளிலும் உதவி நல்கிய துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அருட்தந்தையர், அருட்சகோதரிகள் மற்றும் நேரில் வந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எங்கள் துயரில் பங்கு கொண்ட எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வே. கு. பஞ்சரட்ணம்**
ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்
**திருமதி காயத்திரி யூட்** (மகள்)
மருதநகர், பரவிப்பாஞ்சான்,கிளிநொச்சி.

(சி.11799)

# நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

கீழ் வரும் அட்டவணைப்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்-II திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மையக்கிராமங்களில் கிராமத்திற்கான பங்கேற்பு கிராமிய கணிப்பீடு (PRA), பங்கேற்பு தேவைகள் மதிப்பீடு (PNA) கூட்டங்கள் நடைபெறவுள்ளதால் தயவுசெய்து இம் மையக்கிராமங்களின் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல கிராமியமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் காலை 9.00 மணிக்கு அந்தந்த மையக்கிராமங்களில் சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். அரச உத்தியோகத்தர்களில் சமுதாய உதவிக்குழுவில் (CST/TST) நியமனம் பெற்ற அனைவரையும் இத்தினங்களில் சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| இல | மையக்கிராமம் | திகதி |
|---|---|---|
| 01 | அம்பாள்புரம் | 02.05.2005 |
| 02 | வன்னிவிளாங்குளம் | 03.05.2005 |
| 03 | நட்டாங்கண்டல் | 04.05.2005 |
| 04 | அனிஞ்சியன்குளம் | 05.05.2005 |
| 05 | ஆலங்குளம் | 06.05.2005 |
| 06 | உயிலங்குளம் | 07.05.2005 |
| 07 | கற்குவாறி | 09.05.2005 |
| 08 | நீதிபுரம் | 10.05.2005 |
| 09 | பனிக்கன்குளம் | 11.05.2005 |
| 10 | திருமுறிகண்டி | 12.05.2005 |
| 11 | புலிமச்சிநாதகுளம் | 13.05.2005 |
| 12 | கரிப்பட்டமுறிப்பு | 14.05.2005 |

| இல | மையக்கிராமம் | திகதி |
|---|---|---|
| 13 | சிவநகர் | 16.05.2005 |
| 14 | சின்னச்சாளம்பன் | 17.05.2005 |
| 15 | பெரிய இத்திமடு | 18.05.2005 |
| 16 | தண்டுவான் | 19.05.2005 |
| 17 | பளம்பாசி | 20.05.2005 |
| 18 | தேவிபுரம் | 21.05.2005 |
| 19 | இளங்கோபுரம் | 25.05.2005 |
| 20 | இரணைப்பாலை | 26.05.2005 |
| 21 | மந்துவில் | 27.05.2005 |
| 22 | ஆறுமுகத்தாகுளம் | 28.05.2005 |
| 23 | முறிப்பு | 30.05.2005 |
| 24 | புதறிகுடா | 31.05.2005 |
| 25 | முள்ளியவளை கிழக்கு | 01.06.2005 |

எந்திரி ச.கு.சிவகுமார்
பிரதித்திட்டப் பணிப்பாளர்.
நியாப்-முல்லைத்தீவு

(சி.11817)

# நாடாளுமன்றக் கூட்டத்தைப் புறக்கணிக்க தேசிய சனநாயகக் கூட்டணி முடிவு

(புதுடில்லி)

நாடாளுமன்றக் கூட்டத்தைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்குப் புறக்கணிக்க பா.ஜ.க.தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

கால்நடைத்தீவன வழக்கில் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் குற்றாச் சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்ட பின்பும் லல்லுப் பிரசாத் அமைச்சராக பதவியில் நீடிப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்து இவ்வாறு முடிவு எடுக்கப் பட்டுள்ளது. முன்னாள் பிரதமரும், தேசிய சனநாயகக் கூட்டணித்தலை வருமான வாஜ்பாயின் இல்லத்தில் அவரது தலைமையில் செவ்வாய்க் கிழமை மாலை நடைபெற்ற தே.ச கூட்டணி உயர்தலைவர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டுக்கான மத்திய வரவுசெலவுத்திட்டம் மற்றும் ரயில்வே வரவுசெலவுத்திட்ட ஒப்புதல் அளிக்கும் நடைமுறை மக்களவையிலும், மாநிலங்களவையிலும் அடுத்த இரண்டு நாள்களில் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்படக்கூடாது

## இடதுசாரிக் கட்சிகள்

இந்தியாவில் பெற்றோல் , டீசல் விலையை உயர்த்தக் கூடாதென இடது சாரிக் கட்சிகள் மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணையின் விலைக்கேற்ப இந்தியாவிலும் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலையை உயர்த வேண்டுமென எண்ணை நிறுவனங்கள் மத்திய அரசைக் கேட்டுள்ளன.இதன்படி பெற்றோலின் விலை லீற்றருக்கு 2.50 சதமும், டீசலின் விலை 1.30 சதமும் உயர்த்தப்படுமென நிதியமைச்சகம் அறிவித்துள்ளது. இந்நிலையில் இடது சாரிக் கட்சிகளின் பிரதிநிதிகள் பெற்றோலிய அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

# நேருவுக்கு தென்னாபிரிக்க உயர்விருது

(புதுடில்லி)

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேருவுக்குத் தென்னாபிரிக்க நாட்டின் மிக உயரிய விருது செவ்வாய்க்கிழமை பிரிட்டோரியாவில் வழங்கப்பட்டது.வெளிநாட்டினரைக் கௌரவிக்க தென்னாபிரிக்கா வழங்கும் உயர் விருது இதுவாகும். ஆபிரிக்க-ஆசிய ஒற்றுமைக்காக நேரு ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டும் வகையில் இவ் விருது வழங்கப்பட்டது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் உத்தரவின் பேரில் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும் நேருவின் கொள்ளுப் பேரனுமான ராகுல் காந்தி இவ்விருதைப் பெற்றுக்கொண்டார். தென்னாபிரிக்க அதிபர் தாபோ முபெகி இவ்விருதை வழங்கினார்.

இதேபோல, இந்தோனேஷியாவின் முன்னாள் அதிபர் சுகர்னோவுக்கும் விருது வழங்கப்பட்டது. அதை அவரது மகள் மேகவதி சுகர்னோபுத்திரி பெற்றுக்கொண்டார்.

# 50 போயிங் விமானங்களை கொள்வனவு செய்ய இந்தியா திட்டம்

## பத்து வருடங்களின் பின் எயார் இந்தியா நடவடிக்கை

ஏயார் இந்தியா நிறுவனத்திற்கு 30 ஆயிரம் கோடி ரூபா செலவில் 50 போயிங் விமானங்களை வாங்குவதற்கு இதன் நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. நிர்வாகக் குழுவின் இந்த முடிவு மத்தியரசின் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று நிறுவன அதிகாரி ஒருவர் மும்பையில் தெரிவித்தார்.

பத்து ஆண்டு இடைவெளிக்குப் பின் புதிய விமானங்களை இந்நிறுவனம் வாங்குவதாக அவர் கூறினார். புதிதாக வாங்க உத்தேசித்துள்ள விமானங்கள் மூன்று வகையினதாக இருக்குமென்றும் அவர் கூறினார்.அடுத்த எட்டு ஆண்டு காலத்திற்கான விமான சேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் புகைப்படத்துடன் வாக்காளர் பட்டியல்

(சென்னை)

தமிழகத்தில் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று புதிய தலைமைத் தேர்தல் ஆணையாளர் பி.பி. தாண்டன் தெரிவித்தார்.

காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் விதிமுறை மீறல்கள் இருக்கிறதா? என்பது குறித்துத் தேர்தல் ஆணையகம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை வெளியிடும் திட்டத்தைத் தேர்தல் ஆணையகம் செயல்படுத்தி வருகிறது. எதிர்காலத்தில் இந்தியா முழுக்கவும் இந்த முறை அறிமுகம் செய்யப்படும். ஏற்கனவே புதுவை, கேரளத்தில் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஹரியாணாவில் ஒரு தொகுதியில் இம்முறை பரீட்சார்த்தமாக அறிமுகம் செய்யப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டது. அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இம்முறை உள்ளூராட்சித் தேர்தலிலும் நடைமுறைப்படுத்தலாம் என்று பலரும் வலியுறுத்தி வருகிறார்கள். ஹைதராபாத்தில் நடைபெற்ற தேர்தல் அதிகாரிகள் கூட்டத்தில் இதே கருத்து வலியுறுத்தப்பட்டதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** உத்தியோக உதவியாளர் தரம் -03

**தகைமைகள்:** க.பொ.த.(சாதாரண தர)தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:-** $\frac{3,670-5,070}{70X20}$ + 6,000

**அகவை எல்லை:-** 19-25 ஆண்டுகள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டு கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் **“ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை-உத்தியோக உதவியாளர் தரம்-03”** எனக் குறிப்பிடப்பட்டு 2005.05.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:- * முழுமையாக நிறைவு செய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.

* நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (மனிதவள மேலாளர், ***மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி.*** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி.11808)



## வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்

# பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒப்பந்தக்காரருக்கு கீழ்வரும் பணி நிலையில் உள்ளவர்கள் தேவைப்படுகின்றனர்.

**பணிநிலை:-01**
**தொழில் நுட்ப உத்தியோகத்தர்**

**தரம்:-** (NCT, BCT, HNT) சான்றிதழ்கள் உடையவர்கள்(ஆண்கள் மட்டும்)

**வயது:-** 25-55

**பணி நிலை:-02**
வேலை மேற்பார்வையாளர், கட்டட நிர்மாணத் துறையில் இரண்டு வருட அனுபவம் அல்லது க.பொ.த உயர்தரம் இரண்டு பாடம் சித்தி.

**வயது:-** 19-35

மேற்படி வேலைத்திட்டமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். 14.05.2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், தலைமைச் செயலகம், வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
வடக்கு கிழக்கு பிராந்திய
நிர்மாணிகள் சங்கம், தலைமைச்
செயலகம், கிளிநொச்சி.

(சி.11818)

# சுனாமி நிவாரண கிரிக்கெட்; தலைவர்களாக லாறா—சச்சின்



சுனாமி நிவாரணத்துக்காக இரண்டு காட்சி போட்டிகளை நடத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) முடிவு செய்தது.

அதன்படி கடந்த சனவரி மாதம் சுனாமி நிவார ணப் போட்டி அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்'பேர்ன் நகரில் நடந்தது. இந்தப்போட்டி மூலம் ரூபா.50 கோடி நிதி திரண்டது.

சுனாமி நிவாரண இரண்டாவது போட்டி கொல் கத்தாவில் இந்த மாதம் நடைபெறுவதாக இருந்தது. கடுமையான வெய்யில் காரணமாக இந்தப் போட்டி லண்டனுக்கு மாற்றப்படுகிறது.

சுனாமி நிவாரண கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது கண்காட்சி ஆட்டம் லோர்ட்ஸ் மைதானத்தில் ஜூன் 14ஆம்திகதி நடக்கிறது. இதில் எம்.சி.சி அணியும், சர்வதேச 11பேர் அணியும் மோதுகின்றன.

எம்.சி.சி. அணிக்கு டெண்டுல்கரும், சர்வதேச 11பேர் அணிக்கு லாறாவும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளனர். இருவரும் உலகின் தலை சிறந்த துடுப்பாட்டவீரர்கள் என்பதால் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறினார்கள். தென்னாபிரிக்கத் தலைவர் சிமித், நியூசிலாந்து தலைவர் பிளமிங், முரளிதரன், வோர்ன், சிம்பாப்வே வீரர் அண்டி பிளவர் ஆகியோர் இந்தப் போட்டியில் விளையாடுவதை உறுதி செய்துள்ளனர்.

# அக்தர் மீதெந்தக் கோபமுமில்லை தகுதி பெற்றால் அணியில் இடம்

## ஷாரியார்கான்



"சொகைப் அக்தர் மீது எங்களுக்கு எந்தக்கோபமுமில்லை. முழு உடல்திறன் பெற்றுவிட்டால் அவர் கட்டாயம் அணியில் இடம்பெறலாம்" என்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் ஷாரியார்கான்.

பாகிஸ்தான் கிரிக்கெட் நம்பிக்கை நட்சத்திரம் என்று சோகைப் அக்தர் கருதப்பட்டார் அந்தக் காலம் எப்போது அவர் இல்லாமலே இந்திய மண்ணில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதோ அப்போதே அக்தரின் முக்கியத்துவம் அணியில் அடிபட்டுபோய்விட்டது. மீண்டும் அணிக்குள் நுழையப் போராடுகிறார் அக்தர். லாகூரில் கடந்த திங்களன்று நடந்த 20/20 கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு ஐந்து விக்கெட் வீழ்த்தினார்.

ஆனாலும். அவருக்காக மனமிரங்கவில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாரியார்கான் உள்ளூரில் நடக்கும் 20/20 கிரிக்கெட் என்பது சும்மா நான்கைந்து ஓவர்கள் வீசும் போட்டி. இதை வைத்து அக்தர் உடல்தகுதியை நிர்ணயிக்க முடியாது என்றார்.

# இந்திய அணிப் பயிற்சியாளராக புதிதாக ஸ்ரீவோவும் சேர்ந்துள்ளார்



இந்திய அணியின் பயிற்சியாளர் 'போட்டியில்' புதிதாகச் சேர்ந்துள்ளார் ஸ்ரீவோ. பதவிக்காலம் முடிந்ததும் ஜோன் ஸ,ட் விலக, புதிய பயிற்சியாளரைக் கண்டறியும் பணியில் இந்திய கிரிக்கெட் சபை தீவிரமாக இறங்கியுள்ளது. அவுஸ்திரேலியாவின் கிரெக் சொப்பல், டொம் மூடி, டீன் ஜோன்ஸ் என நிறையப் பேர் போட்டியில் உள்ளனர். இவர்களோடு ஸ்ரீவோவும் சேர்ந்துள்ள தாகத் தெரிகிறது. அணித்தலைவர் கங்குலி,கிரெக் சொப்பலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

மூடியின் பெயரை ஜோன்ரைட் உட்படப்பல முன்னணி வீரர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இவருக்கே அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலில், ஸ்ரீவோவின் விருப்பம் புதியதிருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலிய அணிக்குப் பல வெற்றிகளைத் தேடித்தந்த ஸ்ரீவோ இந்தியாவோடு நெருங்கிய தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# ரியல் மாட்ரிட் கால்பந்து அணி சீன கால்பந்து அணியுடன் மோதல்



ரியல் மாட்ரிட் கால்பந்து அணி மீண்டும் சீனாவுக்குச் செல்லவுள்ளது. சர்வதேச கழகங்களுக்கிடையிலான கால்பந்துப் போட்டிகளில் ரியல் மாட்ரிட் அணி பிரபலம். உலகின் முன்னணி வீரர்கள் இந்த அணியில்தான் இருக்கின்றனர். இரண்டாண்டுகள் முன் ரியல் மாட்ரிட்" அணி சீன விஜயம் மேற்கொண்டது. பீஜிங் நகரில் நடந்த போட்டியில் சீன டிராகன் அணியை எதிர்த்து விளையாடியது.மீண்டும் ஜூலையில் சீனா வருகிறது. மாட்ரிட். ஜூலை 23 ஆம் திகதி பீஜிங் ஹுண்டாய் கழக அணியுடன் ஒரு போட்டி விளையாடுகிறது.

"இரண்டாண்டுகள் முன் சீனமக்கள் எங்களுக்கு அளித்த அன்பான வரவேற்புக் காரணமாக மீண்டும் இம்முறை வருகிறோம். இந்தத்தடவை முன்னணி வீரர்கள் பெக்காம், ரால்,ஜிடேன்,ரொனால்டோ, பிகோ, ஓவன் மற்றும் கார்லோஸ் உட்பட அனைத்து நட்சத்திர வீரர்களும் அணியில் இருப்பார்கள்" என்கிறார் ரியல் மாட்ரிட் துணைத் தலைவர் பட்ராகினோர்.

# கங்குலியே சிறந்த தலைவர்


இன்சமாம்

"ராவிட்டைவிட கங்குலியே சிறந்த அணித்தலைவர் கடைசிஇரண்டு ஒருநாள் போட்டிகளில் கங்குலி இல்லாதது சாதகமாக அமைந்தது. இதனால்தான் தொடரை எளிதாக வெல்ல முடிந்தது" என்கிறார் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம்.

அகமதாபாத் ஒரு நாள் போட்டியில் இந்திய அணி தாமதமாக பந்துவீச, கங்குலிக்கு ஆறு போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. டில்லி,கான்பூர் போட்டிக்கு ராவிட் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்திய கிரிக்கெட் சபையின் இந்த முடிவுக்கு நல்ல வரவேற்புக் காணப் பட்டது. மோசமான போர்மில் இருந்த கங்குலி இடம் பெறாமல் போனது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைத்தந்தது. ஆனால், பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் வேறு விதமாகச் சிந்திக்கிறார். கங்குலி இல்லாததே தங்களுக்கு சாதகமாக அமைந்தது என்று புது விளக்கம் தருகிறார் இன்சமாம்.

# பரிசுத்தொகை அதிகரிப்பு

ஒவ்வொரு ஆண்டும் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய நான்கு கிராண்ட்சிலாம் டென்னிஸ் போட்டி நடைபெறுகின்றது.

இந்த ஆண்டுக்கான விம்பிள்டன் போட்டி ஜூன் 20 ஆம்திகதி முதல் ஜூலை மூன்றாம் திகதிவரை லண்டனில் நடக்கிறது. நான்கு கிராண்ட்சிலாம் போட்டிகளில் விம்பிள்டனில்தான் அதிக பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வழங்கப்பட்ட பரிசுத் தொகையை விட இந்த ஆண்டு 3.9 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூ86.85 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

# முழுத் தகுதியுடன் பிளின்டொப்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமானஅன்ருபிளின்டொப் அவுஸ்திரேலியாவுடனான ஆஷஸ் தொடரில் பங்கேற்கும் தகுதியுடன் அணிக்குத் திரும்பியுள்ளார்.

லங்காசயர் அணியின் சகலதுறை வீரரான பிளின்டொப் இதுவரை அவுஸ்திரேலியாவுடன் எந்த ஒரு டெஸ்ட் தொடரிலும் பங்கேற்கவில்லை.

காயம் காரணமாக பல மாதங்களாக ஓய்விலிருந்து தற்போது லங்காசயா அணிக்காக கவுண்டி போட்டிகளில் இவர் பங்கெடுத்து வருகிறார்.

இவர் இறுதியாக கடந்த சனவரி 17 ஆம் திகதி ஜோகன்னஸ் பேர்க்கில் ஆரம்பமான தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது போட்டியில் விளையாடினார்.

அவருக்கு அண்மையில் நடைபெற்ற சத்திரசிகிச்சையின் பின்னர் அவர் நீச்சலிலும், மலையேறுதலிலும் ஈடுபட்டார். எனினும் அடுத்தமாதம் நடை பெறவுள்ள பங்களாதேஷுடனான போட்டியில் பிளின்டொப் பங்கேற்கமாட்டார் எனக் கூறப்படுகிறது.

# யாழ். பெரியபுலம் ம.வி. அணியை கிளி.ம.வி. அணி தோற்கடித்தது


களத்தடுப்பிற்குத் தயாராகும் கிளி. ம.வி. அணி


யாழ். பெரியபுலம் கிரிக்கெட் அணி

பரபரப்பான கடினப்பந்துப் போட்டியில் கிளி ம.வி. அணி யாழ்.பெரியபுலம் ம.வி. அணியை வெற்றி பெற்றுள்ளது. கிளி.ம.வி. அணிக்கும் யாழ்.பெரியபுலம் ம.வி.அணிக்கும் இடையேயான இந்தப் போட்டி கடந்த 22ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

15அகவைப்பிரிவினர் கலந்து கொண்ட 40ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சி யில் வெற்றி பெற்ற கிளி ம.வி. அணித் தலைவர் ஆ.அனுசாந் தனது அணி துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இதன்படி கிளி/ம.வி. அணி 40 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித்தலைவர் அனுசாந் 30 ஓட்டங்களையும் செந்தூரன் 20 பந்துகளில் 25 ஓட்டங்களையும், நிரோசன் 13 ஓட்டங்களையும், கிருபாகரன் 12 ஓட்டங்களையும், தவக்குமரன் பத்து ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பெரியபுலம் ம.வி.சார்பாக வினோஜன் சிறப்பாகப் பந்து வீசி ஐந்து விக்கெட்டுக்களையும், பிரதிசன் இரண்டு விக்கெட்டுக்களையும், மதுசுதன் ஒருவிக்கெட்டினையும் பெற்றனர். 161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் ஆடிய பெரிய புலம் ம.வி. அணியினர் 40 ஓவரின் இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய போது க.சஞ்சீவனின் சாதுரிய மான பந்து வீச்சில் ஓட்டம் எதனை யும் பெற முடியாது ரன் அவுட் முறையில் தமது ஏழாவது விக் கெட்டினையும் இழந்து 159 ஓட்டங் களைப் பெற்ற நிலையில் தோல்வி யைத் தழுவினர்.


துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆடிய கஜிந்தன் 54 ஓட்டங்களையும், பிரதீபன் 26 ஓட்டங்களையும், மதுசுதன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் க.சஞ்சீவன் இரண்டு விக்கெட்டினையும், வா.சஞ்சீவன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர், சிறப்பான களத்தடுப்பு மூலம் நான்கு விக்கெட்டுக்கள் ரன் அவுட் முறையில் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொக்குவில் இந்துக்கல்லூரியுடனான போட்டி யில் கிளி .ம.வி. அணி தோல்வியடைந்தது.



...ங்கள்:- கா. சுரேன்

படைய தொடக்க ... கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு நகரில் இருந்து விசு... நகர் வரைக்கும் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட பெண்கள் பிரிவினருக்கு சோதி... படையணித்தளபதி கேணல் துர்க்கா அவர்கள் கைலாகு கொடுப்பதையும், ஆண்கள் பிரிவில் முதலாம் இ...தையும் (08), இரண்டாம் இடத்தையும் (62) பெற்ற இருவரையும் படங்களில் காணலாம்.



## சிந்தனைக்கு

இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை; கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021;2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மீண்டும் தடைகள்!

சிறிது சிறிதாக ஆரம்பித்த சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகள் தற்பொழுது யுத்த நிறுத்த உடன்பாட்டையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் படிப்படியாக வளர்ச்சி கண்டு வருகின்றது. இப்போக்கு தடுத்து நிறுத்தப்படாது போனால் யுத்த நிறுத்த உடன்பாட்டின் நோக்கமும், யுத்த நிறுத்தமும் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சிறிலங்கா படைத்தரப்பினர் படிப்படியாக வடக்கு-கிழக்கில் அதிலும் குறிப்பாகக் கிழக்கு மர்காணத்தில் தமது கெடுபிடிகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளனர். ஒரு புறத்தில் தமது நிலைகளைப் படிப்படியாகப் பலப்படுத்தி வருவதோடு மக்களினது அன்றாட வாழ்விற்கும், விடுதலைப்புலிகளின் அரசியல்செயற்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

இன்று விடுதலைப்புலிகள் தொடர்பாக சிறிலங்கா இராணுவத் தரப்பு கைக்கொள்ளும் நடவடிக்கையானது சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தாலோ அன்றிச் சந்தர்ப்பம் ஒன்றை உருவாக்கியோ விடுதலைப்புலிகளைக் கைது செய்யவும், காவலில் வைக்கவுமே சிறிலங்கா இராணுவத் தரப்பு முற்படுகின்றது.

இதற்கென அண்மைக்காலத்தில்-யுத்த நிறுத்த காலத்தில் - வழமையாகி விட்ட நடவடிக்கைகளைக் கூட மாற்றியமைக்கும் வகையில் அது செயற்படத் தொடங்கியுள்ளது. இந்த வகையிலேயே மட்டு. மாவட்ட அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் உட்பட இரு போராளிகள் சிறிலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனத்திற்குரிய ஆவணங்கள் இல்லை என்ற காரணம் காட்டியே அவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் நடைமுறையில் ஆவணங்கள் இல்லாத வாகனங்களைத் தடுத்து வைத்தல் அன்றி திருப்பி அனுப்புதல் என்பதே வழமையாக மேற்கொள்ளப்படும் வழிமுறையாகும்.

இதை ஒத்த நடவடிக்கைகள் அதாவது ஏதோ ஒரு காரணம் கூறிப் புலிகளைக் கைது செய்யவும், தடுத்து வைக்கவும் சிறிலங்காப் படைத்தரப்பும், பொலிசாரும் முற்படுகின்ற அதேவேளை பொது மக்கள் மீதான கெடுபிடிகளையும் அதிகரித்துள்ளனர். அதிகரித்த சோதனைகள், பொருட்கள் கொண்டுசெல்வதற்கான தடைகள் என்பன தற்பொழுது மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகியுள்ளன.

விடுதலைப்புலிகளுக்கும்-அரசாங்கத்திற்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து தமிழர் தாயகத்தின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டன. பொருட்கள் யாவும் தடையின்றி எடுத்து வருவதற்கான அனுமதியும் அளிக்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது பொருளாதாரத் தடையை மீண்டும் அமுல் செய்வது போன்ற செயற்பாடுகளில் சிறிலங்கா இராணுவம் முனைப்புக்காட்டுவதாகத் தெரிகின்றது. இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் மூதூரில் கட்டைபறிச்சான் பகுதிகள் வாகரைப்பிரதேசம் போன்றவற்றிற்குக் கட்டடப் பொருட்கள், எரிபொருட்கள் என்பவற்றை மக்கள் எடுத்துச் செல்வதற்கு இராணுவம் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

இதேசமயம் மின்கலன்கள், மின்பிறப்பாக்கிகள் போன்றவற்றையும், வேறு சில பொருட்களையும் கொண்டு செல்ல இராணுவம் அனுமதி மறுத்து வருகின்றது. இத்தனைக்கும் இப்பொருட்கள் எவற்றிற்கும் தடைகள் விதிக்கப்பட்டதாக இல்லை. இந்நடவடிக்கை ஒரு வகையில் உத்தியோகப் பற்றற்ற வகையில் பொருளாதாரத் தடை கடைப்பிடிக்கப்படுவதாகவே கொள்ளத்தக்கதாயுள்ளது.

இத்தகைய நடவடிக்கையானது மற்றொரு புறத்தில் புரிந்துணர்வு உடன்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகிய இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் மாறானதாகும். அதாவது மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் போடப்படும் முட்டுக்கட்டையாகவே இது அமைந்துள்ளது.

சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகள் மீது மறைமுக யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றது என்பது ஏற்கனவே யுத்த நிறுத்தத்தைப் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள விடயமாகும். இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் எதுவும் மேற்கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளது.

இந்நிலையில் அரசியல்துறைப் போராளிகள் மீதும், மக்கள் மீதும் இராணுவம் மேற்கொண்டு வரும் கெடுபிடி நடவடிக்கைகள் இயல்பு வாழ்க்கையை முற்றாகவே பாதிப்பிற்குள்ளாக்கும் வகையிலானதாக உள்ளது. சிறிலங்கா இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கைகளானது படிப்படியாக அரசாங்கம் யுத்தத்தை நோக்கி நகரத் தொடங்குவதாகவே சந்தேகம் கொள்ள வைக்கிறது.

# தலதா மாளிகையின் பொறுப்புக்களை அரசு நியமிப்பவரிடமும் ஒப்படைக்கமாட்டேன்

## தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்ன

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் நாலாம் திகதியுடன் கண்டி தலதா மாளிகையின் பிரதம பொறுப்பாளர் தியவதன நிலமே அவர்களின் பதவிக் காலம் முடிவடைகின்றது. அதன் பின்தான் ஒரு நிமிடமும் அந்த ஆசனத்தில் அமரமாட்டேன் என தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக இப்பதவிக்கு ஒருவரை அரசாங்கம் நியமிக்குமானால் தலதா மாளிகையின் புத்தர் சிலை இருக்கும் அறையின் திறப்பைக் கையளிக்கமாட்டேன் எனவும், பெறுமதி வாய்ந்த தலதா மாளிகையின் புரதான சொத்துக்கள் இருக்கும் அறையின் கதவுகளுக்கு சீல் வைக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தில் தலதா மாளிகையின் திறப்புக்களை வேறு நபருக்கு கையளிக்க முடியாது. பரம்பரையாகவே இது கடைப்பிடிக்கின்றபடியால் சம்பிரதாய அணுகுமுறைகளைத் தெரியாத ஒருவரிடத்தில் தாம் திறப்புக்களை கையளிக்கப்போவதில்லையென நிரஞ்சன் விஜேரத்ன மேலும் கூறியுள்ளார்.

# கடல்கோள் அனர்த்தப் பிரதேசங்களிலுள்ள சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு!

## -யுனிசெப் அமைப்பு தகவல்

(கொழும்பு)

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள ஐந்து வயதிற்குற்பட்ட சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள 16 வீதமான சிறுவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதாகவும்,

இவர்களில் 35 வீதமானவர்கள் இருக்கவேண்டிய சாதாரண நிறையிலும் குறைவாக இருப்பதாகவும் யுனிசெப் அமைப்பு அறிவித்துள்ளது.

சுகாதார ஆய்வுகள் திணைக்களமும், யுனிசெப் அமைப்பும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆறுமாத காலத்தில் 69 வீதமான குழந்தைகள் விற்றமின் 'ஏ' குறைபாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக யுனிசெப் அமைப்பின் செயற்திட்டப் பணிப்பாளர் யாஸ்மின் அல் ஜக்கியூ தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத் தூதரகத்தில் விசா அனுமதி பெறுவதில் மோசடிகளைத் தடுக்க உதவுமாறு கோரல்

(கொழும்பு)

விசா அனுமதி தொடர்பாக மேற்கொள்ளப்படும் மோசடிகள் தடுக்கப்பட வேண்டுமென அமெரிக்காவிலிருந்து வருகைதந்துள்ள தூதரக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளான அலெக்ஸ் மூரே மற்றும் மைக்கல் கொலின்ஸ் ஆகியோர் சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், கொழும்பு, குற்றப்புலனாய்வுப் பிரிவினர், கடத்தல்களுக்கு எதிரான அமைப்பின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கத் தூதரகத்தின் விசா அனுமதி பெறுவதில் இடம்பெறும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு உதவி செய்யுமாறு அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2003ஆம் ஆண்டு விசா அனுமதி பெறுவதில் 45 மோசடிகளும், 2004 ஆம் ஆண்டில் 84 மோசடிகளும் இடம்பெற்றிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சிறிலங்காப் பொலிசாரும், குறறப்புலனாய்வுப் பிரிவினரும் உதவிசெய்யவேண்டுமென அமெரிக்கத்தூதர பாதுகாப்பு அதிகாரிகள் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இயற்கை அனர்த்த தற்காப்பு; பலப்பிட்டியவில் பயிற்சி வகுப்பு

## தொடர்ந்தும் பயிற்சியளிக்க ஏற்பாடு

(கொழும்பு)

கடற்கோள் அனர்த்தம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது மேற்கொள்ளக்கூடிய தற்காப்பு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி வழங்கும் நிகழ்வொன்று தென்பகுதியில் அமைந்திருக்கும் பலப்பிட்டிய பகுதியில் நடைபெற்றுள்ளது.

சுற்றாடல் துறை அமைச்சரான ஏ.எச்.எம்.பௌசியின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றுள்ள இந்தப் பயிற்சியின் போது இப்பகுதியிலுள்ள அதிகளவான பொது மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சி வழங்கும் நிகழ்வில் பல நிபுணர்கள் கலந்து கொண்டதாகக் கருத்து வெளியிட்டிருக்கும் அமைச்சர் பௌசி.

கடற்கோள் அனர்த்தம் ஏற்பட்டால் அதை எவ்வாறு ஏனையவர்களுக்கு அறிவிக்கவேண்டும் என்பது தொடர்பாகவும், தற்காப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சென்று, பொதுமக்களுக்கு இவ்வாறான பயிற்சியளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பௌசி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பாதாள உலகக்குழுவுடன் தொடர்புள்ள பொலிசார் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவுடன் பொலிசார் தொடர்பு வைத்திருப்பாராயின் அவர்களுக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படுமென்று சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் போதைவஸ்து வியாபாரி ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்தமை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்தே பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இந்த எச்சரிக்கையினை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# வவு. தமிழர்புனர்வாழ்வுக் கழகத்துடன் சர்வதேச வெலிட் அமைப்பு சந்திப்பு

வவுனியா மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினரை சர்வதேச வெலிட் அமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த திங்கள் மாலை 5.00 மணியளவில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தியுடன் இச் சந்திப்பு இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தால் "போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டமானது கடந்த ஒரு வருடமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இது தொடர்பான யுனிசெப் நிறுவனத்தினால் இலங்கையில் வடக்கு கிழககில் அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்களை கண்காணித்து மதிப்பிட்டு வரும் வெலிட் இன்ரநஷனஸ் அமைப்பின் பிரதிநிதி ஜோநேவ்ஸ் திட்ட அடைவுகளையும் முன்னேற்றங்களையும் நேரடியாகக் கேட்டறிந்ததுடன் தனது திருப் தியையும் தெரிவித்தார். த.பு.கழக வவுனியா மாவட்ட செயலகத்தில் சுமார் அரை மணிநேரம் மாவட்ட பணிப்பாளருடன் நடைபெற்ற இச் சந்திப்பில் பல்வேறு திட்ட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

# மாகாணசபை ஒத்திவைப்பு கோழைத்தனமானது

# ஜே.வி.பி யின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### சனாதிபதியின் செயல் நகைப்பிற்குரியதெனவும் ஜே.வி.பிசாடல்

(கொழும்பு)

மேல்மாகாண சபையை ஒத்திவைக்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை கோழைத்தனமான பிரச்சினையிலிருந்து தப்பியோட எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமாகவே தாங்கள் கருதுவதாக மேல்மாகாண சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களின் குழுத்தலைவர் வருண தீப்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து தாங்கள் கவலையடைவதாகவும் இதுவொரு பிழையான முன்மாதிரியெனவும் அவர் தெரிவித்தார். பிரச்சினைக்கு முகம் கொடுத்து பிழையை சீபடுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விட்டதாகவும் முதலமைச்சருக்கு எதிரானமுறைப்பாடுகள் குறித்து சனாதிபதி இதைவிடக் கூடுதலாக கவனம் செலுத்தியிருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். அடுத்த மாகாண சபை கூட்டத் தொடரின் போதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமானால் மக்கள் விடுதலை முன்னணி தனது தற்போதைய நிலைப்பாட்டிலேயே இருக்கும் எனத் கூறிய அவர்,ஆறு மாத காலமாக மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த 19 மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு எதிராக பல முறைப்பாடுகளைச் செய்தபோதும் அதுகுறித்து மௌனம் சாதித்த சனாதிபதி தற்போது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ள வேளையில் முறைப்பாடுகள் குறித்து விசாரிக்கப் போவதாகக் கூறியுள்ளமை நகைப்பிற்குரிய விடயம் எனவும் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கான ஆரம்பம் எனக் கூற முடியாது. இது குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை எனக் கொள்ளலாம் எனவும் வருண தீப்த மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## "விழி நிமிர்த்திய வீரம்" இறுவட்டு இன்று வெளிவருகிறது



நிதர்சனம் தர்மேந்திரா கலையகத்தின் உருவாக்கத்தில் மேஜர் சோதியா படையணியின் வெளியீடான "விழிநிமிர்த்திய வீரம்" எனும் ஒலிப்பாடல் இறுவட்டு இன்று வெளியாகின்றது.

இசைப்பிரியனின் இசையில் எஸ்.ஜி.சாந்தன் திருமலைச் சந்திரன், நிரோஜன், வசீகரன், ஜெயபாரதி கௌசிகன், மணிமொழி கிருபாகரன், பிறின்சி றஞ்சித்குமார், மேழின் இம்மானுவல், தவமலர், யுவராஜ் சீலன், இசையரசன், சந்திரமோகன் றொபேட்ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர்.

பாடல்களை, புதுவை இரத்தினதுரை, கு.வீரா,வேலணையூர் சுரேஸ், தமிழவள், மலைமகள், செல்வி, புரட்சிகா ஆகியோர் எழுதியுள்ளனர்.

## மத்திய மலைநாட்டில் சீரற்ற காலநிலை; ரூபவாஹினிக் கோபுரத்தை மின்னல் தாக்கியது!

(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் நேற்று மாலை கரு முகில்கள் சூழ்ந்த நிலையில் கடும் மின்னல் தாக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நுவரெலிய பீதுருதாலகால மலையில் அமைந்துள்ள இராணுவ ராடர் மற்றும் ரூபாவாஹினி கோபுரத்தினை மின்னல் தாக்கியுள்ளது. நேற்று பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக ரூபாவாஹினி தொலைக்காட்சியின் சேவைகள் ஸ்தம்பித்துள்ளன.

அத்துடன் கடும் பனியும் சூழ்ந்த காலநிலையும் நிலவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அவதானமாக நடந்துக்கொள்ளுமாறு காலநிலை அவதான மையம் எச்சரித்துள்ளது.

கண்டி மற்றும் நுவரெலியப் பகுதிகளிலேயே இந்த மின்னல் தாக்கம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினால் நீதிமன்றம் செல்ல பிக்குகள் முன்னணி முடிவு!

### -கொழும்பு ஊடக மாநாட்டில் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு அமைக்கப் படுமானால் அதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்லப்போவதாக தேசிய பிக்கு முன்னணி எச்சரித்துள்ளது.

அரசியலமைப்பின் 143 ஆவது சரத்தின் படி இந்த வழக்கை தாம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளதாக .தேசிய பிக்கு முன்னணி தெரிவித்துள்ளது

நாட்டுக்கு பாதகம் ஏற்படும் எனக்கருதும் விடயம் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என குறித்த 143 அரசியல் அமைப்பின் சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த தேசிய பிக்கு முன்னணியின் அமைப்பாளர் கெலவல்கல சந்தாலோக தேரர் தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றுடன் இவ்வாறான ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்கு அதிகாரம் இல்லை எனக்குறிப்பிட்டார்.

விடயம் தொடர்பாக தாம் சமயம் சட்ட விளக்கங்களை பெ[illegible] வருவதாக அவர் தெரிவித்தார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர் ஆகியோரை சந்தித்து இது தொடர்பில் கருத்துக்களை பெறவும் தாம்முயற்சிப்பதாக சந்தாலோக தெரிவித்தார்.

இதேவேளை பொதுக் கட்டமைப்புக்கு எதிராக கையொப்பங்களை திரட்டி அதனை சனாதிபதிக்கு சமர்ப்பிக்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## திருமலை நகர்ப்பகுதியில் பொதுமக்கள் மீது சிறிலங்காப் பொலிசாரின் சோதனைகள் அதிகரிப்பு

(திருமலை)

திருகோணமலை நகர்ப் பகுதியில் சிறிலங்காப் பொலிசாரின் சோதனைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சொகுசு வாகனங்கள் நேற்றுமுன்தினம் நகரின் பல இடங்களிலும் தடுத்து நிறுத்தப்பட்டுக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் விசனம் வெளியிடப் பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இந்தச் சோதனை நடவடிக்கைகள் உந்துருளிகளில் செல்வோரிடம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் இரவு வேளைகளில் நகரின் முக்கிய சந்திகளில் இராணுவ கவச வாகனங்களிலும் படையினர் வாகனங்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. திருகோணமலை புகையிரதநிலையத்திலும் கடந்த சிலதினங்களாகப் பொலிசார் பயணிகளின்பயணப் பொதிகளைச் சோதனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையினைத் தொடர்ந்து கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறாகப் பயணிகளைச் சோதிக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப் பட்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ஆனால் தற்போது இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சோதனை நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அச்ச உணர்வை உருவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலனாய்வு அதிகாரி காணாமல் போனமைக்கு போ.நி.க. குழு அலுவலகத்துள் நுழைந்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கல்கிஸ்ஸ புலனாய்வுப் பிரிவு அதிகாரி டி ஜெயரட்ணம் காணாமல் போனமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இராணுவ புலனாய்வாளர்களை பாதுகாக்கும் தேசிய இயக்கம் என்ற அமைப்பு நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது

ஜெயரட்ணத்தை பாதுகாப்பாக மீட்டுத்தரக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதற்கு முன்னர் இந்த அமைப்பினர் பம்பலபிட்டிய வஜிராராமய விகாரையில் இருந்துபேரணிஒன்றை நடத்தினர். பின்னர்அந்தப் பேரணி கொழும்பிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புகுழு அலுவலகத்[illegible] வந்தடைந்தது.

இதன் பின்னர் குறித்த பே[illegible]ணியில் பங்கேற்றோர் போர் நிறுத்தக்கண்காணிப்புகுழு அலுவலகத்துக்குள் பிரவேசித்து அங்கு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் அதனைத் தடுக்க முயற்சித்த போதும் இது பலனளிக்கவில்லை. இதன் பின்னர் பேரணியினர் அங்கு கோரிக்கை மனுவைக்கையளித்தனா.

அரசாங்கம் புலனாய்வுத்துறையினரை பாதுகாக்கத் தவறி விட்டதாகப் பேரணியில் பங்கேற்றோர் குற்றம் சுமத்தினர். (32)

### பொல்காவெல...

மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. சுமிக்ஞையை பொருட்படுத்தாது புகையிரதம் கடவையை கடக்க முயன்ற பேருந்தை புகையிரதம் வேகமாக மோதி300 மீற்றர்தூரம் இழுத்துச் சென்றதாகவும் பேருந்து இரண்டாகப் பிளந்து பற்றி எரிந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட சிலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தலைமறைவாகி இருந்த விபத்திற்குள்ளான பயணிகள் பேருந்துச் சாரதியும், நடத்துனர்கள் இருவரும் நேற்றுமாலை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண பிரதி பொலிஸ்மா. அதிபர் அசோக ரட்ணவீர கூறியுள்ளார்.

### மணல்...

தின் தாப்பாத்தி ஆகிய அகதிமுகாம்களில் வசித்து வந்தவர்களாவர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய மீனவர்களின் படகு மூலம் கொண்டு வரப்பட்ட இந்த ஈழத்தமிழ் அகதிகள் கச்சதீவில் உள்ள மணல்திட்டு ஒன்றில் இறக்கிவிடப்பட்ட நிலையில் அங்கிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் சிறிலங்கா கடற்படையினரால் மீட்கப்பட்டு தலைமன்னார் சிறிலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று இந்த 21 பேரையும் மன்னார் நீதிமன்றத்தில் சிறிலங்கா பொலிசார் விசாரணைக் காக முற்படுத்தினர். விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்ற நீதவான் என்.எம்.அப்துல்லா இந்த அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு மன்னார் நகர கிராம அலுவலர் ஊடாக அனுப்பி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். திருகோணமலை, வவுனியா, தலைமன்னார் போன்ற இடங்களைச் சேர்ந்த இந்த அகதிகளில் 13 ஆண்களும், 08 பெண்களும் அடங்குவர். (18)

### -உதைபந்தாட்ட போட்டியில்-

## தமிழ் இளைஞர்கள் மோதல் இருவர் கவலைக்கிடம்!

(கொழும்பு)

பிரித்தானியாவில் தமிழ் இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லண்டன் ரூட்டிங் பகுதியி[illegible] உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு கொண்ட இரு இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலின்போது இரு தமிழ் இளைஞர்கள் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

### கிளிநொச்சி...

விசேட படையினரின் விசேட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. என ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர்.

அணிவகுப்பில் சிறப்பாகப் பங்கேற்கும் அணியினருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## ஒளிக்கலை ஒன்றிய அலுவலகம் யாழ்.நகரில் திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.மாவட்ட ஒளிக்கலை ஒன்றிய அலுவலகம் நேற்று யாழ்.நகரில் திறந்துவைக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு பிரப்பங்குளம் கே.கே.எஸ் வீதியில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கட்டடத்தில் இது திறந்து வைக்கப்பட்டது. ஒளிக்கலை ஒன்றியத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மங்கலவிளக்கினை நிதர்சன துணைப்பொறுப்பாளர் சுந்தர் ஏற்றியதைத் தொடர்ந்து மேற்படி ஒன்றியப் பிரதிநிதிகள் பலரும் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றினார்.

அலுவலகத்தை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலை விழி திறந்து வைத்ததைத் தொடர்ந்து பேராசிரியர் சண்முகலிங்கம் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி யாழ். வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் மற்றும் நிதர்சன ஆலோசகர் ஆகியோர் உரைநிகழ்த்தினர். (8[illegible])

### புலிகளை...

அவ்வாறு சோதனை என்ற போர்வையில் உளவியல் ரீதியாக அரசியல் போராளிகளைத் தடுத்து வைத்து விசாரிப்பது. போர்நிறுத்த மீறல்களைச் செய்கிறார்கள் என அப்பட்டமான பொய்ப்பிரச்சாரங்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் வீணாக விடுதலைப் புலிகளை கோபமூட்டும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளை மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறை கண்டிக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது